வைத்திய சாஸ்திரம்

சித. வே. சண்முகநாத பிள்ளை.

வைத்திய சாஸ்திரம்

அல்லது

உரோக நிவாரணப்

பொருள்த் தொகுதி 180 என்னும்

பதார்த்தகுண விளக்கம்

★

ஆசிரியர் "வைத்தியமணி"

சித. வே. சண்முகநாத பிள்ளை

தேவகோட்டை.

இலக்கியப் பதிப்பகம்

காரைக்குடி.

முதற்பதிப்பு 1947.

விலை ரூபா ஒன்றே கால்.

Printed at the South India Press, Karaikudi.
Publisher by Dr. V. Shanmuganatha Pillai, T. P. No. 171/47

SIDDHA VAIDYA SANGAM

(Established 1927 & Registered under the Society's Act)

Office:—**Aruppukkottai Road, Madura.**

சித்த வைத்திய சங்கம்

(ரிஜிஸ்டர்டு)

அருப்புக்கோட்டை ரோடு, 13-10-1946.

மதுரை.

கலியுக-௵ 5047-க்கு விய-௵ புரட்டாசி-௴ 25௳ மதுரை சித்த இந்திய வைத்திய இரண்டாவது மகாநாடு சென்னை அரசாங்க இந்திய மெடிசன் போர்டு மாஜிமெம்பர் வைத்திய பூபதி உயர்திரு ஜீ. கண்ணுசாமி பிள்ளையவர்கள் தலைவராகவும், இராமனுதபுரம் ஜில்லா கோர்ட்டு நீதிபதி ஸ்ரீமான் பீ. ராமகிருஷ்ண ஐயர் எம். ஏ, ஐ. சி. எஸ் அவர்கள் திறப்பாளராகவும் மதுரை அன்னக்குழி மண்டபத்தில் நடைபெற்றபோது, அகில திருவிதாங்கூர் சித்த வைத்திய சங்கத் தலைவர் திரு. நித்தியானந்த சுவாமிகள், திருநெல்வேலி திரு. தளவாய் திருமலையப்ப முதலியார், எல். ஐ. எம் அவர்கள், சித்து நூலாராய்ச்சியாளர் நாகை து. சிவப்பிரகாசம் பிள்ளை, ஆர். எம். பி. அவர்கள், இன்னும் பல மருத்துவக்கலை வல்லவர்கள் முன்னிலையில், சண்முகானந்த சித்த வைத்தியசாலைச் சித்தவைத்தியர் தேவகோட்டை சி. த. வே. சண்முகநாத பிள்ளையவர்களால் ஆக்கப்பெற்ற ரோகநிவாரணப் பொருள்த்தொகுதியென்னும் பதார்த்த குணவிளக்கத்தையும், மீனுமிர்தமென்னும் உயிர்நிலைக்கலை இலக்கணத்தையும் அரங்கேற்றலாயிற்று.

இவ்விரு நூல்களையும் யாங்கள் நன்கு பரிசீலனை செய்தோம். இவைகள் சித்தவைத்திய நூல்கள் பலவற்றை யாராய்ந்து மேன்மையான மருந்துகள் செய்யும் சித்தவைத்தியர்களுக்கும் சித்தவைத்தியப் பயிற்சியாளர்களுக்கும் சித்தவைத்தியக்கலை உயர் பறிபவர்களுக்கும் எளிதிற் பயன்தரும். உயர்நல முடையதாயும் சித்தவைத்தியர்களெல்லோருக்கும் பொதுவாக எல்லா மருத்துவக் கலைஞர்களுக்கும் சென்னை அரசாங்கத்தார் நடத்தும் இந்திய வைத்தியக் கல்லூரிகளுக்கும் உதவக்கூடியதாகவும் பொதுவாக பூத பௌதிக தத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்தரத்தக்க சிறந்த நூல்களாகவும் இருக்கின்றன.

ஒப்பம்.

P. முத்துக்கருப்ப பிள்ளை R. I. M. P.

காரியதரிசி.

மதுரை.

N. B. வயிரவன் செட்டியார்

தலைவர்.

பதிப்புரை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். மக்கள் யாவரும் நோயின்றி வாழவே விரும்புகின்றனர். உடல் நலம் நன்கு இருந்தால்தானே மக்களோடு மக்களாய் யாவற்றிலும் கலந்து பணியாற்ற முடியும்.

நல் வாழ்வு வாழ வைத்தியமுறை இன்றியமையாதது. வைத்தியத்திற்கு வேண்டிய மிக மிக முக்கியமான நிவாரணப் பொருள்களை ஒருங்கே முறையாகத் தொகுத்து 'வைத்திய சாஸ்திரம் அல்லது உரோக நிவாரணப் பொருளைத் தொகுதி நூற்றெண்பது' என்னும் பதார்த்தகுண விளக்கம் என்ற அருமையான நூலாக ஆக்கித் தந்திருக்கிறார்கள், நம் வைத்தியமணி சித. வே. ஷண்முகநாத பிள்ளை அவர்கள். அவர்கட்கு நம் நன்றி உரியதாகுக!

வைத்தியர்கள் மட்டுமின்றி பொது மக்களும் நன்கு கையாளும் முறையில் இந் நூல் அமைந்திருக்கிறது.

மக்கள் நலனுக்கு வழி காட்டியாகவுள்ள இந் நூலைத் தமிழ்த் தாயின் மலரடிகளில் வைத்து வணங்குகிறோம்.

காரைக்குடி
19-10-47.

புதுவயல் சோமையா
இலக்கியப் பதிப்பகம்.

தேவகோட்டை

தருமபுர ஆதீன வித்துவான்

"பாலகவி, வரகவி, உரைமணி"

வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்

அவர்கள் இயற்றியது

பூதலத்துப் பதினாறு பேறும் பெற்றுப்
புகழுடைய நல்வாழ்க்கை வாழ்கவென்று
மூதறிஞர் வாழ்த்துரைப்பர் பேறு தம்முள்
முதற்பேறு நோயற்ற வாழ்க்கை யாகும்
வாதமுத லாயபல பிணியை யோட்டும்
வழியுரைத்த சித்தர்முறை தெளிந்த சித்தன்
ஓதியசண் முகநாதன் தேவை வாழ்வோன்
உரோகநிவா ரணத்தொகுதி உரைத்தான் மன்னோ

திருநெல்வேலி ஜில்லா சிந்தாமணி

ஸ்தல வித்துவானும்

தேவகோட்டை ஸ்ரீ முருகானந்த வைத்தியசாலை

அதிபருமாகிய

S. P. V. P. பால்சுப்பிரமணிய முதலியார் இயற்றியது

சீர்கொண் டில்ங்குமுயர் தேவையம் பதியிலுறை
திகழ்கங்கை குல திலகனுஞ்
செப்புஷண் முகநாத பிள்ளையென் றுலகுபுகழ்
சித்தர் நூற்பல கற்றவன்
ஏர்கொண் டிலங்கிடுஞ் செந்தமி ழிலக்கண
மினிய ஜோதிட நூற்பல
தென்னிடத் தும்பல ரிடத்திலுங் கற்றுளோ
னிடைவிடா தாராக்ஷியோன்
பார்கொண் டிலங்கிடும் பண்டிதர்க ளின்பமுற
பலநூலி லுள்ளவை யெலாம்
பண்பாய்த் திரட்டியே ரோகம் நிவாரணிகள்
பாடினன் தொகுதியாகத்
தார்கொண் டிலங்கிடும் புலவருங் கண்டெனத்
தரணியோர் தேன்பாலெனச்
சந்ததம் பிடகருந் தேவாமு தாமெனச்
சகத்துளோர் புகழ மாதோ.

திருப்பெருந் துறைக்கு அடுத்த

பரிமணங்குடி

ஸ்ரீ பரமகுருஸ்வாமி மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ சஷ்டிச் சுவாமிகள் இயற்றியது

சித்தகணம் புகலாயுள் வேதசா
    ரங்களெலாந் திரட்டி யொன்ருய்ப்
புத்திருட்பத்தாற் சகல ரோகநிவா
    ரணியெனப்பேர் புனைந்து நூற்றிப்
பத்தெண்பா வாக்கியளித் தான்தேவைக்
    காராளர் பயில்விற் பன்னன்
சத்தி சுதற் கன்புசெய்வே
    ஷண்முகநா தக்கவிஞன் றணிமீதே

உ

சிவமயம்

தஞ்சாவூர் ஜில்லா திருவாரூர்

ஸ்ரீ ஷண்முகானந்த தருமசித்தவைத்தியாலயம்

ஷண்முகானந்த சித்த பார்மசி புரோப்ரைட்டர்

அகிலஇந்திய சித்த வைத்தியப் பிரச்சாரம்

திருவாரூர் சித்த வைத்திய சங்க அமைச்சர்

கவர்மெண்டு இந்திய வைத்திய செண்டரல்

போர்டு மெம்பர் ஆகிய

"வைத்திய பூபதி"

G. கண்ணுச்சாமி பிள்ளையவர்கள்

இயற்றிய சிறப்புப் பாயிரம்

அகவற்பா

அகில உலக மாக்கிய முதல்வன்
அடியிணை போற்றி யான்சொல லென்னெனி
னுலகந் தோற்ற வுயர்சரா சரங்கள்
பலவுஞ் சிறக்கப் பரிவுசெய் முதல்வனைப்
பார்வதி வேண்டப் பரிவோ டிணங்கிச்
சீரிய மாந்தர் சிறுபிணி நீக்க
அம்பிகை பாக னருளாற் கூறினர்
அம்பிகை யருளா லறுமூன்று சித்தர்கள்
நடமாடுங் கோயில் நற்றிருப் பணியெனத்
திடம்படக் கடமை செய்தன ராதலின்

ஷண்முக நாத தனிப்பெயர் பூண்ட
ஷண்முகப் பெரியோன் பன்னூ லாய்ந்து
பலபிணி போக்கும் பதார்த்த குணச்செயல்
பலரும் எளிதிற் பருகு மமிர்தமாய்
கூட்டுணச் செய்தான் குமரனருளால்
நாட்டிய சீலன் நலிந்தவர்க் கன்புளான்
பாரத வுலகிற் பலசிவ வர்க்கத்தில்
சீரியவைத் தியர்செயுஞ் சீவசகாயமாய்
அன்புடன் றொண்டினை யாற்றிட வேண்டி
இன்புட னின்னூ லிலையமு தாக்கினான்
தேவுலோ கம்நிகர் தேவகோட் டைப்பதி
மேவுகாரராள மரபில்வே லாயுதன்
றவத்தால்ப் பயந்த ஷண்முக நாதன்
பவப்பிணி நீக்கும் பண்புடை யானே

தேவகோட்டை சைவப்பிரகாச வித்யாசாலைத்

தலைமையாசிரியர்

திரு. அ. கணபதி ஐயா அவர்கள் இயற்றியது

மதியமும் ஞாயிறும் வலம்வரு மவனியில்
நிலையியற் பொருளும் இயங்கியற் பொருளுமென
ஓரிரு வகைத்தே ஒன்றிய வவைதமுள்
இயங்கியற் பொருளே ஏற்றமதென்ப
அவையும் பிணியால் அல்லலுறாது
வாழ்தலே சிறப்பென மாண்பின ருரைத்தார்
பிணிவந் துறுமேற் றணிவது பெறுகென
கருத்தி னினைந்தே கழறினர் பலவாம்
மருத்துவ நூல்கள் மாமுனி வரர்தாம்
அனையவர் நூல்கள் தனைநனி யுணர்ந்து
கைவன்மையொடு செய்வன் மையதூஉம்
கைவரப்பெற்றோன் மெய்மொழி யாளன்!
செந்தமிழ் கற்ற சீரியோன் திருவுடைக்
காராளர் குலத்துக் கவின்பெறத் தோன்றிய
வேலாயுதம் பிள்ளை மேன்மைசால் தவத்தால்
மைந்த னுருக்கொடு வந்தமூ தறிஞன்
ஷண்முகநாதன் எனுந்தனிப் பெயரோன்
திணிநில மாக்கள் பிணிநவி லுறாது
செம்மை சேர்கெனச் செப்பினன் கவியொரு
நூற்றெண்பானும் ரோக நிவாரணி
போற்றினிர் கேண்மின் புரைதபக்
கூற்றுவற் றடுத்துக் குலவுவாழ் வுறவே

உ

சிவமயம்

உரோக நிவாரணப் பொருள்த் தொகுதி 180 என்னும் பதார்த்தகுண விளக்கம்

விநாயகர் துதி

நேரிசை வெண்பா

ஓங்கார மூலமுத லேயூ றனைத்தையும்
ஓங்குபவ நோயும் ஒருவுவாய் - ஓமிறைவா
ஓங்கிவளர் மால்மருகா வும்பரிறை யும்பணியும்
ஓங்கணப தேநமா வோம்.

முருகக் கடவுள் துதி

அரன்மைந்தா அறுமுகவா அயிலரசே குகமணியே
யருளாம் மூர்த்தி
திரள்மிகுசூ ரரம்பிளந்த செவ்வேளே கிரவுஞ்சஞ்
சிதறச்செய்த
சரஹணப வானந்தா குருமுருகா தேவர்துயர்
தவிர்த்தவீரா
சரணருள்வாய் வினைதீர்த்த பண்டிதனே சற்குருவே
சரணின்தாளே.

வாலாம்பிகை துதி

ஆயிரத்தெண் ணிதழ்க்கமலத் தம்பிகையே பராபரையே
யகிலலோகத்
தாயருளாம் ஒருருவே சதுர்முகனு தியராமைந்
தலைவர்பீட

மாயதனில் வைகுமெழில் மனோன்மணிவா லாம்பிகையே
மைந்தனேற்கு
வாய்மைதவ ருமொழியில் ரோகநிவா ரணிசெப்ப
வருள்செய்வாயே.

ஐங்கரன் பாதம் அறுமுகன் பாதம்
அம்பிகை பாதமே பணிந்து
பங்கம தறவே யுலகுளோர் யாரும்
பலபிணி யால்நலி யாமல்
சங்கைய தறவே பண்டிதர் நோயின்
சத்துரு வகையெளி தறியத்
துங்கமாஞ் சித்தர் நூல்பல வறிந்து
தூயவென் குருபதம் பணிந்தே.

குருபதம் பணிந்து ஷண்முக நாதன்
கூறினேன் உலகுளோர் தழைக்கப்
பெருமைசே ருரோக நிவாரணத் தொகுதிப்
பேராம்நூல் நூற்றுயெண் பதுவும்
அருந்தமிழ் யாப்பா லுரைத்தனம் பிடகர்
யாவரும் உளமகிழ் வெய்தப்
பெருங்கட லுடுத்த புவிமிசை மனிதர்
பீடைநோ யொழிந்து வாழ்ந்திடவே

அவையடக்கம்

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம்

உடலுக்குறு மைங்குற்றம றுத்தோரரி தெனுமைந்
துகளற்றுமு லோகப்பொரு ளுவைங்குண முறவே
திடமீந்திடு மெய்வாதிகள் சித்தாதிப ரமுதிற்
றிரள்வெண்ணெயும் வானூறமு துஞ்சுண்ணம
(தெனவா
மடைவேசொல நேராயறி வாருற்றிடு மகிலத்
ததிநஞ்சுறு கல்மண்ணட லியாவுட லுறுநோய்
தடையாக்கிட வெண்ணுஞ்சிறு தன்மையுடை யவன்மா
தவர்கள்பதந் தாழ்ந்தேசிறி தாநூலிதை யறைந்
(தேன்

காயசித்தி மூலிகைத் தொகுப்பு

காயசித்தி மூலிகையின் விபரஞ் சொல்வேன்
கருநெல்லி கருநொச்சி சாயா தேவி
தியனைய புல்லுங்கார் சித்ர மூலஞ்
சேர்ந்தாடும் பாவையுங்கல் லாரை சீந்தில்
தியனைய தருவோடு கருங்க ரிப்பான்
சிவப்பான திராய்குமரி சதுரக் கள்ளி
மாயநிறக் காஞ்சிரைமூ விலைக்கு ருந்து
மால்துளசி கருவாழை கருப்பு நீலி (1)

கருநீலி யினிப்புநிம்பம் பொற்பூக்கையான்
காம்புசிவந் திருக்குங்கீழ்க் காயின்நெல்லி
கருவீழி எருமைகணைச் சான் விருக்ஷம்
கற்றும ரைசுணங்க விருக்ஷம்ரோம
விருக்ஷமுநா ராகரந்தை புளியாரைகார்
வேம்புகருங் கஞ்சாமுண் டணி விருக்ஷம்
கருவள்ளி குண்டலமாம் பாலையோடு
காயசித்திக் காமிம்முப் பத்துமூன்றே (2)

மூன்றான முப்பூவால் ரசத்தாலுப்பால்
மூரியா முபரசத்தால்ப் பாஷாணத்தால்
வான்றானுங் காயசித்தி கணத்திலாமேல்
வகுத்தவகை தனிலுயர்வு ரசமும்முப்பூத்
தோன்றாதே கணப்போதில்ச் சடம்பேதித்துத்
தொண்ணூற்றா றுஞ்சட்டை கழன்றே போகுந்
தோன்றாது குருவருளா லன்றியோகஞ்
சூக்ஷமாய்ச் சாதித்துக் கற்பமுண்ணே (3)

வாதரோக நிவாரணிகள்

வாதநிவா ரணச்சரக்கின் வரிசை சொல்வேன்
வாய்விளங்கம் வெள்ளுள்ளி காயஞ்சீரம்

வாதமடக் கியுஞ்சிவதை குக்கில் சுக்கு
வாளங்கொம் பரக்குசெண் பகப்பூவோமம்
சேதுவா மணக்கிலையு மவுரிதோடை
சிறுதேக்கு சதகுப்பை கரியசீரம்
பீதமாஞ் சாந்துசரக் கொன்றைப்பட்டை
பிரம்பசுவ கெந்தியின் மூலம்பரங்கி (4)

பரங்கியாம் பட்டையோடு முருங்கப்பட்டை
பாவகமூ லம்முருக்கு வேப்பம்பட்டை
பரட்டையாங் கிரையுமா விலிங்குதும்பை
பாலூகா எருக்குசங்கு தைவேளைவேர்
குரசாணி யோமங்கூத் தன்குதம்பை
கொடிக்கள்ளி சாறடையுந் திருகுகள்ளி
திரமையா முடும்புநெய் கடம்பவித்து
தேவதாரமு மஞ்சள் மிளகாயாமே (5)

மிளகாயும் நாகசிங்கி மேனியின்வேர்
மிகுசிவப்பாங் குங்குமப்பூ கறுப்புக்கோழி
மிளகுகண்ட திப்பிலியைந் திலையாம்நொச்சி
மேடமுண்ணுப் பாளைசெருப் படியின்வேரும்
முளரியா மணக்கிலையுங் கறுப்புநொச்சி
முப்புறண்டி புங்கின்வேர் சங்குக்குப்பி
முளரியுரை கௌதாரி யுள்ளானேடு
முதிர்மஞ்சட் கௌரிபா ஷாணமாமே (6)

கௌரியாம் பாஷாணம் அக்கிராகாரங்
கடுகுகாக் கணமுமறு பத்துநான்குஞ்
சௌரியமாம் வாதநிவா ரணியிதென்று
சாற்றினேம் பலவற்றிற் சிறிதுமேலே
சௌரியமாம் உப்புவுப ரசம்பாஷாணம்
சரம்அசரம் லோகங்கள் பலவற்றுலுஞ்
சௌரியமாம் முழுவிபரஞ் சொல்லவென்றால்ச
சாற்றிமுடி யாதுகண் டறிந்துசெய்யே (7)

விரைவாத நிவாரணிகள்

விரைவாத நிவாரணியின் தொகுப்புச்சொல்வேன்
வெள்ளுள்ளி கொடிவேலி வீழியின்வேர்
கரியசீ ரகம்வெள்ளைக் கழற்சிவித்து
கழற்சியிலை சாறடையின் கிழங்குகாயம்
பரிதியா மெருக்கம்பூ காட்டேரண்டப்
பாலிலுப்பைப் பிண்ணாக்கு குருவாந்தெல்லு
அரியவே ரண்டமுடக் கொத்தானிஞ்சி
ஆளிவிரை யுகாயிலைகுங் குமப்பூவாமே (8)

குடல்வாத நிவாரணிகள்

குடல்வாத நிவாரணியைக் கூர்ந்துகேளு
கொல்லன்கோ வைக்கிழங்கு சரக்கொன்றைப்பூ
அடலரச னுப்போடு வளையலுப்பு
ஐந்துப்பு நவச்சாரஞ் சிவந்தவல்லிக்
கொடியோடு வெள்ளறுகு தூதுளங்காய்
கோழியவ ரையினிலையுஞ் சிறியபீளை
சுடரெண்ணெய் முள்ளங்கிக் கிழங்கினோடு
சூர்நீக்கும் விழலரிசி யிருபதாமே (9)

குன்மம் வாயு நிவாரணிகள்

குன்மமொடு வாயுநிவா ரணியைக்கேளு
குக்கில் சேங்கொட்டையுள்ளி வாய்விளங்கம்
வன்னியாம் லோகமொடு கரியவங்கம்
மாவிலிங்கின் வேர்சீரம் இஞ்சிசுக்கு
வன்னியாங் கடுகோடு கண்டதிப்பிலி
வயமாவின் திப்பிலியு மப்ளாக்காரஞ்
சின்னமாஞ் செருப்படியுங் குப்பைமேனி
செவ்வாம ணக்கிலையுஞ் சங்கவேரே (10)

வேரோடு நவச்சாரங் கழற்சிவித்து
விபினவா மணக்கிலையி னோடுயெட்டி

வேரோடு அபின்மிளகா யெவச்சியோடு
விளக்கின்நெய் புளியமடல் பஞ்சலோகம்
சீரான பஞ்சபா ஷாணத்தோடு
செப்புவேன் பஞ்சரசம் அஞ்சுவுப்பு
வீரமரி தாரமுர லாமணக்கும்
விளம்பினேம் முப்பத்து நான்குதானே. (11)

பித்தரோக நிவாரணிகள்

பித்தமாம் ரோகநிவா ரணியைக்கேளு
பேய்ப்புடலுங் கொத்துமலி செண்பகப்பூ
சித்தான லவங்கவுரி தாளிசைப் பத்திரி
சீரகமும் பெருஞ்சீரங் காட்டுச்சீரம்
சித்தான தேக்குவால் மிளகுகோஷ்டம்
சிவதைவேர் மொசுமொசுக்கை கழுதையின்பால்
மெத்தவா மதுரமரி நெல்லியேலம்
முந்திரிகைப் பழமிலந்தைப் பழமிம்பூரல் (12)

இம்பூர லிளநீரும் பச்சைப்பூரம்
ஈச்சவெல்லங் குங்குமப்பூ நெல்லிமுள்ளி
சம்பீரப் பழமக்கிராக் காரம்இஞ்சி
சடாமாஞ்சில் தான்றிக்காய் கடார்நாரத்தை
செம்மையாம் அல்லிப்பூ செவியங்கன்னல்
சிறுபயறு நன்னாரி வல்லாரைகார்
நிம்பயிலை வாலுளுவை பற்படாகம்
நீராரை நற்பசலி மணலிக்கீரை. (13)

கீரையொடு பேய்க்குமட்டிப் பழங்க ளாவேர்
கிரந்திநா யகநெய்தற் கிழங்கு நாகம்
கீரைபேய்ப் பாச்சொற்றி பேய்முசுட்டை
கீழ்க்காய்நெல் லியுஞ்சாந்தம் பேரீஞ்சோடு
கோரையதின் கிழங்கோடு குருவைகாடி
கூவிளையின் வேரிந்த வைம்பத்தாறும்

வேரறுக்கும் பித்தத்தை யிவைகள் நீங்க
வேணசரக் கின்னுமுண்டு விரிவாம்பாரே. (14)

சிலேத்தும ரோக நிவாரணிகள்

செப்புகிறேன் சேத்மநிவா ரணியைக்கேளு
சிற்றரத்தை வால்மிளகு நெல்லிமுள்ளி
திப்பிலியும் பேரரத்தை சிறியதேக்கு
தேவதா ரங்கோஷ்டங் கடுக்காய்யானைத்
திப்பிலியும் வெள்ளுள்ளி மிளகுவோமம்
தேன்பிரமி வல்லாரை கற்கண்டோடு
செப்பான முள்ளிவாய் விளங்கம்யிண்டு
செவியமொடு சடாமாஞ்சில் கருப்புச்சீரம் (15)

கருப்பான காக்கணமுங் கண்டங்கத்திரி
கச்சநார்த் தம்பழமும் மேனியின்வேர்
திருமாலின் தாரமுமிந் துப்புவாளம்
தேற்றுவித் திம்பூரல் அத்திவித்து
திருமரத்தின் வித்துமிளங் கொட்டைப்பாக்கு
சிறியசெருப் படிகரிப்பா னழிஞ்சியின்வேர்
பெருங்காயங் கடுகெருமைக் கிடாரிச்சாணி
பெருமதுரஞ் செண்பகப்பூ லவங்கப்பட்டை (16)

லவங்கமொடு சிறிதாஞ்செந் தொட்டியின்வேர்
நன்னாரி மொசுமொசுக்கை யிலைகஸ்தூரி
லவங்கபத்ரி தாளிசையுங் காட்டுச்சீரம்
நாங்குளுவும் வேப்பெண்ணெய் கஞ்சாங்கோரை
தவங்கமா முயலும்முள் ளெலிஜாதிக்காய்
தான்றிக்காய் பழந்தின்னி வெளவாலோடு
பவங்களையே களையுங்கூ விளையின்வேரும்
பசுமஞ்சள் மஞ்சளாஞ் சாரையின்நெய் (17)

நெய்யிலுப்பைப் பிண்ணாக்கு சிவதையேலம்
நெல்லிக்காய் கடம்பவித்து வெள்ளையாட்டின்

நெய்பாலுங் குங்குமப்பூ விஷ்ணுகாந்தி
நேர்பரங்கிப் பட்டையுகா யிலையுடும்பின்
நெய்யுருக்குச் சிந்தூர முசுறுமுட்டை
நிறைமுட்கத் தரிவேருஞ் சிற்றண்டத்தின்
நெய்சிறுவா லுளுவைசங்கம் பழமுமக்கிரா
நிவப்புறுதாம் பூலிமுத்தை யாதொண்டைவேர் (18)

வேரோடு அமுக்குராகஸ் தூரிமஞ்சள்
வெளிச்சிபிசின் தொண்ணூரு மிச்சரக்கு
வேரோடு கபகாச ரோகம்போக்கும்
வெகுசரக்கு இன்னுமுண்டு அளவோஇல்லை
வேரோடு சங்கையற நூலையாய்ந்து
வேல்முருகன் ருளிணையை மேவிப்போற்றி
வேரோடு மானிடர்க்கு வரும்நோய்நீக்கி
விளங்குவாய் குருபதத்தில் விளங்குவாயே (19)

சுரம் தோஷம் ஜன்னி நிவாரணிகள்

சுரந்தோஷம் சன்னிநிவா ரணத்தொகுப்பைச்
சொல்லவிஞ்சி நிலவேம்பு ஆடாதோடை
மரமஞ்சள் வாய்விளங்கம் மாசிப்பத்திரி
மாவிலிங்கம் பட்டைகருந் துளசியோமம்
பெருமுட்டி மாஞ்சிலொடு வலம்புரிக்காய்
பெரியகுமிழ் தும்பையுஞ்செந் தொட்டியின்வேர்
கருஞ்சீர மமிர்தவல்லிக் கிழங்குமுஸ்தை
கஞ்சமாங் கோரையொடு கரியநாவி (20)

கருநாவி பாஷாணம் லிங்கம்பூரம்
கௌரிமனோ சிலைதாரம் ரசசெந்தூரம்
எருவையதன் பஸ்பமொடு வெள்ளைநாவி
ஏலமொடு பேரரத்தை பெரியஏலம்
திருநீற்றுப் பச்சைலவங் கம்மர்த்தப்பூ
செண்பகப்பூ இலுப்பைப்பூ குங்குமப்பூ

குருகருக்கம் பூவேளைப் பூநொச்சிப்பூ
கொடிவேலி தும்பைப்பூ சிறுகாஞ்சோறி (21)

சிறுதேக்கு வாகைவேர் விஷ்ணுகாந்தி
சிவன்வேம்பு வில்வவேர் வேம்பினீர்க்கு
சிறுமுட்டி அவுரிவே ரிலாமிச்சைவேர்
செவியம்வெள் வேல்வேர்வெள் ளேகாம்பட்டை
சிறுஅரத்தை லவங்கபத்ரி பற்படாகம்
செய்யதிரி கடுகுவேம் பெண்ணெய்பூண்டு
சிறுஅண்டம் முசுறுமுட்டை கண்டங்கத்திரி
சிக்குருவேர் தூதுளையும் முட்காவேளை (22)

வேளையொடு கோஷ்டம்கொம் பரக்குமல்லி
வெய்யமிள காயிலையும் வன்னிப்பட்டை
தாளிசைப்பத் திரிவட்டக் கிலுகிலுப்பை
தரணியருக் கன்வேர்கள் ளிக்கொழுந்து
கூளிபுடல் கண்டதிப்பிலி மெருகன்கந்தம்
கோரோசனையிந்த வெண்பத்தொன்றும்
மீளவிடாச் சன்னிசுர தோஷம்போக்கும்
விரித்துரைத்தோம் முறையுணர்ந்து செய்குவாயே (23)

சிரசுநோய் பீனிசம் நீரேற்றம் நிவாரணிகள்

சிரசுநோய் பீனிசம்நீ ரேற்றநீங்க
செப்புகிறேன் ஆதொண்டை கடம்பவித்து
குரட்டையதன் பழங்கசக சாவுமிண்டு
குந்திருக்கம் வெள்ளுள்ளி வெள்ளையாங்காக்
கரட்டானுங் குங்குமப்பூ சூர்யகாந்தி
கார்கோல அரிசியுங்கஸ் தூரிமஞ்சள்
மிரட்டான வூமத்தை யபின்சாம்பிராணி
வெள்ளெருக்கம் பூவலரிப் பழுப்பு கஞ்சா (24)

கஞ்சாவும் பச்சைக்கற் பூரங்கண்டங்
கத்தரியும் நெரியரிசிப் பால்மட்டிபால்

மஞ்சள்தா ளகமுமலை தாங்கிப்பூண்டு
மருதோன்றிப் பூவரத்தை தேவதாரம்
அஞ்சிலையின் நொச்சிதும்பை யாடாதோடை
அகத்தியிலை யரைக்கீரை மிளகாய்மேனி
வெஞ்சார ணைசவுரிப் பழநாய் வேளை
விடாரம ணக்கிலையுங் கரியநொச்சி (25)

கரியசித் தகத்திலக் கடம்பு குப்பை
கருஞ்சிரஞ் சமுத்திராப் பழத்திறேடு
திரிகடுகு மூக்கரைச்சா ரணையும்வாதத்
திறமடக்கி தவசியாம் முருங்கையோடு
திரமான நாற்பத்தொன் பான்சரக்கும்
சேரவொட்டா தேயடக்கும் சிரசுநோயை
திரமான வகையாமிந் நூலறிந்து
செய்குவாய் தவறின்றிச் செய்குவாயே (26)

செவிநோய் நிவாரணிகள்

கர்ணநோய் நிவாரணிகேள் மிளகிறேடு
கழுமுள்கனி கூவிளையின் பழமுஞ்சுக்கு
கருப்பூர மிளகாயும் பன்றிமுள்ளு
கணமும்வேம் பெண்ணெயொடு வலம்புரிக்காய்
அருணக்குங் குமப்பூகுக் கிலுமெள்ளின்னெய்
ஆலமூங் கிலினிலையுஞ் செவியங்குப்பை
அருணமாம் வேளைமலை தாங்கியின்வேர்
அபின்புங்கின் வித்துந்தூ துளைமூவேழே (27)

தந்த நோய் நிவாரணிகள்

தந்தநோய் நிவாரணியைச் சாற்றக்கேளு
தனிமுதலோன் வேம்புசுக்கு சீனக்காரம்
வெந்தசேங் கோட்டைகருங் காலிப்பட்டை
வேம்புநுணு விலைகாயினெடு முள்ளங்கிக்

கந்தம்ஆல் விழுததின்பால் கொட்டைப்பாக்கு
கரியுப்பு நாயுருவி பூலாவெள்வேல்
வெந்துநீ ருனகல்நார் காசுக்கட்டி
வெள்ளைக்குங் குலியபற்பம் அவலரக்கு (28)

அவலரக்கு கொழுஞ்சியபின் பனம்பூ காயம்
அரப்பொடியுந் துவரையிலை கருவேலோடு
தவருச்சா திக்கிழங்கு நாகசிங்கு
தந்தநோய் தனக்கெமனு மிருபத்தொன்பான்
தவருது தசனநோய் நிவர்த்திசெய்யுந்
தன்மையுள்ள சரக்குவகை யனந்தமுண்டு
தவருது முனிவர்சித்தர் நூலாராய்ந்து
சார்ந்து நிற்பாய் குருவுடைய பதத்திற்ருனே (29)

கண்டமாலை ரோக நிவாரணிகள்

கண்டமா லைநாசச் சரக்குச்சொல்வேன்
காட்டுச்சி ரஞ்சங்க வேரின்பட்டை
மண்டலத்தின் வாகைசுடு துரத்திமூலம்
மருதமரப் பட்டை நரிமிரட்டிகுப்பி
மண்டலத்தின் குமிழம்வேர் வெட்டியின்வேர்
மாதும்பை யுகாய்வேரும் எட்டியின்வேர்
அண்டமாங் கெருடனுடைச் சமூலம்முட்டி
யதன்வித்து வேம்பாட லும்மூவஞ்சே (30)

உடம்புக் கடுப்பு உளைவு நிவாரணிகள்

மெய்க்கடுப்பு உளைவுநிவா ரணியைக்கேளு
மிளகாய்தேற் ருங்கொட்டை யால்சமூலம்
மெய்யுங்கஸ் தூரிமஞ்சள் விளங்கங்குப்பை
வேம்பினுரி சிறுதேக்கு கண்டதிப்பிலி
மெய்யாய்வா தம்மடக்கி முப்புரண்டி
வேரிலுப்பை பெருமரவேர் சௌரிவல்லி

வெய்ய யெட்டிவித்துநா ரட்டாம்பட்டை
வேளைநாய் தூதுதரு மஞ்சள்கொட்டி (31)

கொட்டியதின் கிழங்கோடிவ் விருபத்தொன்றுங்
கூறினேன் மெய்க்கடுப்பு உளைவுபோக்கும்
திட்டமாய்க் காயசித்தித் தொகுப்புஞ்சொன்னேன்
தீதாம்வா தங்குடலில் விரையில்வாதம்
அட்டகுன்ம வாயுபித்தஞ் சேத்மங்காய்ச்சல்
அறுமூன்று சன்னிபீ னிசம்தீரேற்றம்
கட்டமாங் கர்ணநோய் தசனநோய்கள்
கண்டமாலைகொடிதாம் நோய்கள்நீங்க (32)

நீங்கவின்னும் வகைவகையாய்த் தொகுத்துச்சொல்
[வேன்
நீணிலத்தில் மானிடர்கள் பிழைக்கரோகம்
நீங்கவகை சொன்னவிந்த நூலையாய்ந்து
நேர்மையாம் மானிடர்தங் கொடுநோய் தீர்த்து
நீங்காமற் குருபதத்தை யறிந்துபோற்றி
நிலைபெரிய நாதாக்கள் பலநூலாய்ந்து
நீங்காமல் மெய்ஞான நிலையில்நிற்க
நிமலனென் குருமுருகன் றாளைப்போற்றே (33)

அரோசிகம் வாய்நீரூறல் நிவாரணிகள்

போற்றியின்னுஞ் சொல்லுகிறேன் அரோசிகநீரூறல்
போக்கவே மஞ்சளரி நெல்லியேலம்
போற்றியாங் கூவிளைவே ரிஞ்சிபச்சைப்
பூரஞ்செங் கழுநீர்ப்பூ வெலுமிச்சங்காய்
கூத்தனுங் கரந்தைகோ ரைக்கிழங்கு
கொமட்டிமா துளைக்கனியுங் கடார்நாரத்தை
ஏத்தமாங் குங்குமப்பூ விளாம்பழந்தேன்
லவங்கவிலை கண்டதிப்பிலி மிளகாய்சீரம் (34)

சீரமொடு மல்லிதிப்பிலி யக்கிராக்காரம்
செய்யதுகிர் தாளிசைகான் மல்லிகையின்

வேர்கரிவேப் பிலையிலந்தைப் பழநெல்லிக்காய்
வெண்கரும்பு ஆள்வள்ளிக் கிழங்குமாஞ்சில்
நாரத்தை முந்திரியின் பழம்அட்டுப்பு
நல்லபழம் புளிகளாக் காயுங்கன்னல்
சீரான தமரத்தம் பழமிம்முப்பத்
தெட்டான சரக்குமரோ சிகத்தைப்போக்கும் (35)

பாண்டு காமாலே சோகை வீக்க நிவாரணிகள்

செப்புகிறேன் பாண்டுகா மாலேசோகை
தீர்க்கின்ற சரக்குவாய் விளங்கங்காந்தம்
ஒப்பில்லாக் கூவிளைவேர் நத்தைச்சூரி
ஊசிமல்லி மருட்கிழங்கு நல்லவேளை
ஒப்பிலான் மூலிகரிப் பான்ச மூலம்
உருக்குமண் டூரமயம் சுரைக்கொழுந்து
செப்பாம்பித் தளைபறம்பம் புளியம்பட்டை
சிறுபீளை நாய்க்கொட்டான் சிறுகீரைவேர் (36)

வேரோடு வெண்காரம் பூனைக்காலி
வித்துஇள நீர்முத்து கீழ்க்காய்நெல்லி
வேரோடு பூவந்திப் பழம்அரத்தை
வெள்ளைக்காக் கணவேர்காட் டாமணக்கு
வேரோடு பூமிச்சர்க் கரைக்கிழங்கு
வெள்ளாட்டின் நீர்பால்சா ரணைவேர்கள்ளி
வேரோடு ஜலமஞ்ச ரிச்செந்தூரம்
மிளகுதக் காளியிலை நெல்லியின்வேர் (37)

நெல்லிவேர் திணைக்கஞ்சி மூசுமல்லி
நீர்முள்ளி சமூலம்பூ வரசம்பட்டை
கொல்லன்கோ வையுடைய சமூலம்வட்டக்
கிலுகிலுப்பை வாழைநீர் வாழையுப்பு
வில்வஇலை பாதிரிவேர் குளத்துப்பாலை
வேரோடு கோமியமும் அஸ்வகெந்தி

கல்யாணக் கரிப்பான்தக் கோலம்பிரம்மி
காராஸ்ரீர் திரிகடுகு பலேகுருஞ்சா (38)

குருஞ்சாநா கணம்புளியி னிலையினேடு
கூறியவிவ் வைம்பத்தெட் டுச்சரக்கும்
பெருந்தொல்லே யாம்பாண்டு சோகைவீக்கம்
பித்தத்தா லெடுத்ததொரு நோயையெல்லாம்
பெருந்தொலேயி லோட்டுவிக்கும் மேலேசொன்ன
பேரான சரக்குவகை தனிலொவ்வொன்றை
பெருமைசேர் கஷாயஞ்சூ ரணமுங்கிர்தம்
பிழையின்றி வகையாகச் செய்துபாரே (39)

நீரிழிவு நிவாரணிகள்

நீரிழிவு நிவாரணியின் தொகுப்புச்சொல்வேன்
நெல்லிமுள்ளி பொற்சீந்தில் பரங்கிப்பட்டை
நீராரை யாவரைப்பஞ் சாங்கங்காந்தம்
நெல்லியதன் பட்டைகல் மதமல்லிப்பூ
நீர்ப்பூலா குங்குமப்பூ நாகமல்லி
நெடுங்கூந்தற் பணேயரிசி லிங்கங்கொன்றை
வேர்கருவேற் பட்டைபிசின் பஞ்சலோகம்
விடத்தைதயிலே நாவலில்வேர் பழம்பூவித்து (40)

வித்தோடு அப்பிரகஞ் செவ்வல்லிப்பூ
விளாம்பிசிஞ வரைப்பிசினுங் கரியவேலின்
வித்தோடு சிறுகட்டுக் கொடிகோதும்பை
வெண்கலத்தின் பற்மெலிச் செவியாங்கிரை
வித்துகரு வங்கங்குரா சாணியோமம்
வெள்ளுள்ளி பொன்முசுட்டை யெள்ளுஅல்லி
வித்துகருங் காலியுரி பிசினிலுப்பை
வேர்கோழிக் கல்லிரல் மருதம்பட்டை (41)

பட்டையொடு ஆலம்பா லஞ்சணக்கல்ப்
பற்பம்பொற் றலேக்கரிப்பான் கடலிராஞ்சிப்

பட்டைசுடு துரத்திவா தாம்பருப்பு
பருங்கூழைக் கடாக்கறியி னெடுகல்லத்திப்
பட்டைகோ ரோசனைசெங் கிளுவைப்பட்டை
பசுமுருங்கைப் பிசினெடுபா திரிமரத்தின்
பட்டையம்பத் தாருமீ தொவ்வொன்றுஞ்செய்
பாகத்தால் நீரிழிவுக் கெமனும்பாரே (42)

நீர்க்கடுப்பு கல்லடைப்பு சதையடைப்பு

நீரடைப்பு மூர்த்திக் கிரிச்சிரம் நிவாரணிகள்

நீர்க்கடுப்பு கல்லடைப்பு சதையடைப்பு
நீரடைப்புங் கிரிச்சிரநோய் நீங்கக்கேளு
நீர்முள்ளி சுரையினிலை நெஞ்சில்வித்து
நீர்பூசி னிக்காய்கல் மதநன்னாரி
வேர்கோவை யிலையேலம் முருங்கையீர்க்கு
வெள்ளரியின் பிஞ்சுவித்து குமட்டிசோகி
ஓரிலைத்தா மரைகல்நார் புளியங்கொட்டை
உருக்கினமாங் காரம்புண் ணுக்குக்கீரை (43)

கீரையொடு பெண்துடரி குப்பைமுள்ளி
ஸ்கோல்விரைகல் லத்திப்பா லிளநீர்சின்னக்
கீரையொடு வாழைநீர் சிறுபீளைவேர்
கிளைக்காற்கல் சிலாசத்து மணித்தக்காளிக்
கீரையொடு ஆண்துடரி வள்ளிக்கந்தம்
கிளையரசு அத்திவித்து எலியின்காதுக்
கீரையொடு பெருங்குமிள்சா ரப்பருப்பு
கிழங்காங்கோக் கன்னலொடு தேத்தான்கொட்டை (44)

கொட்டைஜா லாமிசிரி பனையிச்சங்கள்
குமரிமுள் வெள்ளரியு மாவிலிங்குப்
பட்டைகற் கரிகசக சாபுங்கம்பூ
பனிக்கட்டி பேரீச்சம் பழங்குமட்டி

குட்டித்தக் காளிக்காய் ஐம்பத்தொன் றுங்
குணமாக்குங் கல்லடைப்பு நீர்க்கடுப்பு
வெட்டையா லெழுந்தநீர் நோய்கட்கெல்லாம்
வெகுசுறுக்காஞ் சத்ருவிதென் றறிந்துகொள்ளே (45)

வெள்ளை வெட்டை பிரமியம் நிவாரணிகள்

வெள்ளைவெட்டை பிரமியநோய் மேகம்நீங்க
விளம்புகிறேன் பொற்சீந்திற் கிழங்குசீரம்
வெள்ள றுகு கொன்றைப்பூ மயிர்மாணிக்கம்
வேலியாம் பருத்தியின்வே ரஸ்வகெந்தி
வெள்ளைக்குங் குலியமுமால் விழுதுகோஷ்டம்
விளாம்பிசின்சந் தனங்காந்தம் துத்தநாகம்
வெள்ளைக்காக் கணவேர்சா ரப்பருப்பு
விரைமிளகு ஆலின்வித்து கெருடக்கல்லே (46)

கெருடனுங் கிழங்குவல் லாரை குக்கில்
ஸ்கோல்விரைஜா லாமிசிரி தேற்றுவித்து
திருமரமாம் அரசவித்து பனையின்நொங்கு
தென்னம்பூ பழம்பாசி பாதிரிப்பூ
ஒருதலத்தா மரைவங்கஞ் சங்குக்குப்பி
உகாய்வேர்நாய்க் கொட்டான்வேர் தொட்டால்வாடி
பெருதலச்சர்க் கரைக்கிழங்கு முருங்கையின்பூ
பிரமியுமா வாரையுடைச் சமூலமல்லி (47)

மல்லிகச கசாமிளகு நெருஞ்சில்வித்து
மாவிலிங்கை வேர்முளரிக் கிழங்கிஞ்சிப்பூ
நெல்லிக்காய் கிரைவித்து கொம்பரக்கு
நெய்க்கொட்டான் வேர்லவங்கப் பட்டைநாக
மல்லியாள் வள்ளியாங் கிழங்கப் ரேகம்
மணியாந்தக் காளிபுளி யங்கொட்டைத்தோல்
வல்லியாங் கொத்தான்கொட் டைக்கரந்தை
வாழைப்பூ நரிப்பயிற்றங் கொடிநண்டுக்கல் (48)

நண்டுக்கல் கழற்சியிலே கொடிவேலிவேர்
நற்சங்கின் வேரோடு லவங்கபத்ரி
நன்றுங்கஸ் தூரிஎலிச் செவியின்கீரை
நறுநெய்ச்சட் டிக்கீரை பற்படாகம்
குன்றிலுரை மாகாளிக் கிழங்கதிங்கம்
கூகைநீர் மொந்தன்வா ழைக்கிழங்கு
நன்றான நாரிபுத்ர சீவிவித்து
நாவல்வேர் செந்தாழம் பூதீம்பாலை (49)

தீம்பாலை முளைக்கீரை யவுரியின்வேர்
திரிபலைகாட் டாமணக்குக் கீரங்காரி
யாம்பாலை யகத்திவேர்கொட் டிக்கிழங்கு
யானைநெருஞ் சில்விடத்தைப் பிசின்கோடொற்றை
யாம்தொண்ணூ ரும்மிட்டான் கிழங்கோடொக்க
யார்க்குமெளி தாய்த்தெரியச் சொல்லிவைத்தேன்
பாம்பணிந்தோன் சேய்முருகன் கிருபையாலே
பாடினேன் ரோகநிவா ரணத்தொகுப்பே (50)

உஷ்ணம் எரிவு மெய்வெளுப்பு மேகச்சூடு இவைகளை நீக்கி குளிர்ச்சியைத்தரும் வகைகள்

குளிர்ச்சியையே யளித்துடலின் வெளுப்பைநீக்கிக்
கொடுமேகச் சூடெரிவை நிவர்த்தியாக்கும்
குளிர்ச்சியாம் மூலிபஸ்பம் சரக்கினங்கள்
கூறுகிறேன் செங்கழுநீர்க் கிழங்கதின்பூ
புளிப்பாஞ்சம் பளஞ்சன்ன லவங்கப்பட்டை
பூசினிவித் ததிமதுரம் அத்திக்கள்காய்
அளிநிறையம் போருகப்பூ வதின்கிழங்கு
அகத்திவேர்ப் பட்டைபற் படாகஞ்சீரம் (51)

சீரம்வெந் தயமல்லி கசகசாவுஞ்
செவ்விளநீர் பச்சைகற் பூரஞ்சாந்தம்
கோரங்கி முங்குடனை விரலிக்கோவை
கோஷ்டமுந் திரிக்கனியும் விஷ்ணுகாந்தி

ஓரிலைத்தா மரையப்பைக் கிழங்குகொத்தான்
உவாநெருஞ்சி லம்மாம்பச் சரிசிபேராஞ்
சிரம்பொன் னுங்காணி யும்வல்லாரை
செண்பகப்பூ விலாமிச்சு வெட்டியின்பேர் (52)

வெட்டிவேர் வால்மிளகு மலாக்காய்ச்சாந்தம்
வெப்பூலா வப்பிரகஞ் செவ்வல்லிப்பூ
ஒட்டிப்பட் டைகுளிர்தா மரைமுத்தெண்ணெய்
உயர்கோரோ சனைகான வள்ளிவாழை
முட்டிமெரு கன்கந்த மந்தாரைப்பூ
மூரிமாக் கனிகுமரி யரிநெல்லிக்காய்
கொட்டியாங் கிழங்குபூ லாங்கிழங்கு
கொம்பரக்கு நிலக்குமிளுங் குடவன்பற்பம் (53)

பற்பமாங் கருவங்கம் நாகபற்பம்
பணிமாது ளைக்கனியுங் கிரந்திகேள்வன்
துற்பலனு க்கும்மேகச் சூடெரிச்சற்
றுலைத்திந்த வறுபதுவுங் குளிர்ச்சியாக்கும்
அற்பமாய் நினைக்காதே பலநூலாய்ந்து
அறிந்திந்நோய் நிவாரணியைத் தொகுத்துச்
[சொன்னேன்
பற்பலவாம் முறையாயொவ் வொன்றுஞ்செய்து
பாருநீ யிதன்பெருமை பகரொணுதே (54)

தாதுவிர்த்திச் சரக்குவகை

தேகபலந் தாதுபுஷ்டி வீர்யவிர்த்தி
திடமாயுண் டாக்கும்வித்து கிழங்குலோகம்
போகபல மலர்பருப்பும் புலால்சரக்கு
புகழ்மூலி வேர்வகையும் பிசின்பழங்கள்
யோகபல ரத்தினம்பா லீதொவ்வொன்றும்
ஒழுங்காக வுரைத்திடுவோங் கவனமாய்க்கேள்
வேகமுள சேங்கொட்டை யெட்டிக்கொட்டை
வீழிவித்து சூரிவித்து முருங்கைவித்தே (55)

முருங்கைவித்து தகரைவித்து தேற்றுவித்து
முளரிவித்து வாலுளுவை விராலிவித்து
பருங்கல்லால் வித்துமா வாரைவித்து
பச்சைவித்து நீர்முள்ளி யுருவிவித்து
அரும்பூனைக் காலிவித்து நெருஞ்சில்அத்தி
அரசுவித்து மருதுபிராய் கருவேல்வித்து
கரும்மத்தின் வித்தோடு ஸ்கோல்வித்து
கடுங்கசப்பாம் மூலிவித்தோ டிருபத்தைந்தே (56)

இருபத்தைந் தாம்வித்து வகையைச்சொன்னேன்
இனிக்கிழங்கு வகைவிபர மியம்பவென்றால்
ஒருபத்து நால்கருணை யப்பைக்கோவை
உயர்கெருடன் கிழங்குநிலப் பனைக்கிழங்கு
முருகுற்ற தாமரையுந் தண்ணீர்மிட்டான்
முத்தக்கா சசுவகெந்தி யல்லிகொட்டி
வெருவுற்ற காட்டுவள்ளி பழுவாம்பாகல்
விரிநிலச்சர்க் கரைகல்லா ரக்கிழங்கே (57)

கிழங்குவகை சொல்லிவிட்டோம் லோகம்மூணு
கேளெஃகுபொன் வெள்ளியாம்பூ வகையைக்கேளு
செழுங்கொன்றை பாதிரிபன் னீர்முருங்கை
செவ்வல்லி யல்லிமைக் கொன்றைநாவல்
கொலுமிச்சைப் பூநெருஞ்சில் சிறுநாகப்பூ
குங்குமப்பூ ஆவரைநீ லோற்பலப்பூ
கொழுமிலவங் கஞ்சிற்று மரைசெந்தாழை
கூவிளைபாற் குரண்டிவெண் டாமரைப்பூ (58)

தாமரைப்பூ செங்கழுநீர் காட்டாத்திப்பூ
தந்திநெருஞ் சில்நந்தி யாவர்த்தம்பூ
தாமரையாள் மைந்தன்பூ செண்பகப்பூ
தாசான்பூ செவ்வகத்தி கடுக்காய்துத்தித்
தாமந்தூ துளைபிடாகான் மல்லிகைப்பூ
தருநார்த்தை செம்பருத்தி யரிநெல்லிப்பூ

காமமாம் பூமுப்பத் தாறுஞ்சொன்னேன்
காண்பருப்பு பேதாள வாதாமுந்திரி (59)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்

முந்தி ரிப்ப ருப்பு சாரை யிந்தநாற்ப ருப்பினம்
ஐந்துமாமி சங்கௌதாரி யடவிக்கோழி சிட்டதும்
மைந்துகோழி யும்முடும்பின் வெந்துவந்த நெய்யுமாம்
விந்துவிர்த்தி யாஞ்ச ரக்கு விள்ளவேயு மூந்தபின்
(60)

அபினிகோட்ட நெல்லிமுள்ளி யமிர்தசர்க்க ரைகிராம்பு
விபினமேதிக் சீரமதுர மிளகுபெரிய சீரகம்
சுவணலோக விறையின்கோபந் துடிமராட்டி மொக்குடன்
புவனவேர்கஸ் தூரிமஞ்சள் பொற்க டுக்காய் திப்பிலி
(61)

திப்பிலீமண் டூரம்நெல்லி சிலமதந்நார் கசகசா
அப்ரகம்ப ரங்கித்தோல்கு ராவின்சாணி யோமமும்
ஒப்பறுங்கோ ரோசனைகஸ் தூரியுங் கிராம்புரி
செப்பினஞ்ஜா திச்சிபத்ரி தேன்கறீயெண் ணன்குமே
(62)

நான்குளட்ட தாமினம்ந வின்றன மினிச்சொல்வோம்
பாங்கதாக மூலிவகைகள் பாற்குரண்டி கரியவேம்பு
வேங்கையின்ற லைக்கையானும் விகங்கபாதம் பொன்
[முசுட்டை
வேங்கைசிந்தில் கஞ்சாகன்னல் வேம்புசெங்கற் ருழையே
(63)

செங்கற்றுழை களிப்பிரண்டை சிவகரந்தை புளிச்சக்
[கீரை
செங்கத்தாரி யொடுவல்லாரை செய்யவோ ரிலைக்கஞ்சம்
துந்துளச்செ வியின்கீரை யிந்தமூலி யீரெட்ட
துந்துலங்கச் செப்பினேம் சொல்லுவோநல் வேர்வகை
(64)

கட்டளைக் கலித்துறை

வேர்வகை நிலிநன் னாரி யறுகொடு வீழியதன்
வேர்பனங் கோவையுங் கட்டுக் கொடியதன் வேர்பிரமி
வேர்சிவன் மூலியோ டெட்டாம் பிசின்விப ரம்மிசைக்க
வேர்பூ ரணிப்பிசின் வாகை விளாமுருங் கைப்பிசினே (65)

முருங்கைப் பிசின்கரு வேல்கருங் காலியு மூன்றெடுநால்
அருங்கனிப் பந்திகற் சூர்முந் திரியோ டரியவிளா
பருவா ரிதிக்கனி மாலூர மைந்தாம் பவளமுத்து
கருநீல மாலவா யம்மீது நாற்பால் கழறுவனே (66)

பால்வகை சொல்லவே யாதளைப்பாலும் பருத்திவித்துப்
பால்வாசி யானையின் பாலிந்த நான்காம் பனுவலிது
வோர்நூற் றறுபத்து மூன்ரு முரைத்தவீ தோர்ந் (துணர்ந்து
பார்நூற் றுறைபல பார்த்துரைத் தேனிவை பண்டி [தற்கே (67)

கண்ணோய் நிவாரணிகள்

கண்ணோய் நிவாரணி யேசீ ரகங்கரு வேலிலையும்
செண்பகப் பூவுப்பி லாவல்லி வேருசெவ் வல்லியின்பூ
வெண்தும்பைப் பூசுக்கு சோதிப்புல் சாந்தம்வெண் (காக்கணமும்
தண்டா மரைச்சகு னம்பூக் குமிளுதா ழைவிழுதே (68)

விழுதுகோ ரோசனை தீம்பாலை கன்னிவெண் சோறுமருக்
கொழுந்துசம் பீரமோ டுஞ்சில்லி வேர்குருஞ் சாவதின் (வேர்
செழுங்குளிர் தாமரைப் பன்னமெள் ளின்னெயுந் தேவ (தாரு)
கொழுங்கடுக் காய்முலைப் பால்பீத ரோசனி குங்குமமே (69)

குங்குமப் பூமிளஃ கேலமுத் தக்காசு குன்றிமணி
புங்குவித் தோடதன் பால்பொருட் டும்புளி மாதுளேயும்
வங்காளப் பச்சை மரமஞ்சள் நாகப்பூ வாலுளுவை
செங்கழு நீர்மூ லமுமறு கோடு செருப்படையே (70)

செருப்படை மஞ்சள் புளியிலே பூச்செ வியந்துளசி
குருக்குப்பால் மல்லிகை முல்லேநீர் முள்ளிப்பூ
(கோஉடுப்பை
கருப்பூர வல்லி எலுமிச்சு வித்துகெள தும்பையிலே
இருட்சீரி நெல்லி இளம்பனே மட்டைச்சா றேரழிஞ்சே
(71)

ஏறழிஞ் சில்நந்தி யாவர்த்தம் பூவிள நீர்தகரை
சாரணே வேர்பெரு விச்சி நெருஞ்சிற்பூ தாழமலர்
ஓரிலேக் கஞ்சம் உருவியின் சாற்வெள்ளி லோத்திரமும்
நீர்ப்பூலா நன்னரி திப்பிலி யட்டிநெய்ச் சட்டியதே (72)

நெய்ச்சட்டிக் கீரையு முத்தெருக் கன்செவி நீபமலர்
நெய்க்கொட்டை யின்பழஞ் சிங்கபா ணப்பூவி நீர்கரிப்பான்
கைக்கோ டரக்கனி யேரண்ட வித்துகை யாந்தகரை
மைக்கோ ளதின்கனி மாசக்காய் பிம்பி மகிழவித்தே (73)

வித்துவெட் பூலா களாப்பூவு தாளி விழலரிசி
சுத்துங் கொடிக்கோழிச் சிம்பைகீழ் நெல்லி சுணேமுசுக்கை
பத்துங்கா சுக்கட்டி வல்லாரை யோடு பசலிதேத்தா
வித்து முருங்கைப்பூ தூதுளே வேருவெண் ணொச்சிலேயே
(74)

வெண்ணொச் சிலேயு மெருகன் கிழங்கொடு வெட்டியின்
(வேர்
பொன்னுைத்த கோஷ்டஞ் சிறுங்காசா வேரு
(பொடுதலேயும்
தண்ணெண் மலாக்காய்ப் படீர லவங்கமுஞ் ஜாதியின்காய்
விண்ணின் மணிவே ரதின்பா லடம்ப விதைமுனியே (75)

முனிவசம் புஞ்சாதிப் பத்திரி மாஞ்சின்மூ தோர்குழலும்
நனியா மிலம்பெறு கீரை கிரந்தியின் நாயகமும்
அணியா யுரைத்தோ மிறையிலா மூலியீ தாகுமிதோ
டினியுரைப் போந்தா துவின்விப ரங்கண் ணினிதுறவே
(76)

இனிதுறுந் தாது வகைசொலக் கேளுமி ணையறுசீர்
பனிப்பகைப் பல்லு முதலை கரடி பசுவெருமை
பனிப்பா.் புலிந ரியுங்கரி கிள்ளையும் பன்றிகவி
தனின்பல்லு பூனைகோ குப்பலண் டத்தோடு சங்கு
(முட்டை (77)

முட்டையின் வெண்கரு சேவனெஞ் சென்பு
(முயலெலும்பும்
துட்ட வரிகரி கீரியோ ரீநகந் தூயகாக்கை
முட்டைகெள தாரி எலும்புகூர் மத்தோடு மூரிவைனன்
முட்டை கிளிஞ்சில் தலைமண்டை யோடுமிர் தாருசிங்கே
(78)

மிருதாரு சிங்கி இருதுத்தஞ் சீன மெழுகரக்கு
மிருகத்தின் கோடுநாய் மண்டையின் ஓடொடு
(மின்மினியும்
அரிதாரம் வீரஞ் சிலைநாவி சூதமு மஞ்சனக்கல்
குரவை நுரைநா கரவண்டு இங்கு லிகம்விருலே (79)

விருல்த்தலைக் கல்லும் அதின்சினை சோகிவெண் ணெய்
(யபினும்
விறல்கரிக் கொம்பொடு வெண்குங் கிலியம்வெண்
(காரமதும்
அறல்காடி சூடனும் தேன்பச்சைப் பூரம் அரப்புநெய்யும்
பிறங்கு நவமாம் வகைமணி லோகங் குபேரனுப்பே (80)

உப்புமண் காவி படிகக்கல் காந்த மொடுபெரும்பொ
ருப்பதின் சத்து நிமிளை யளங்குமே லோடொடுக

ருப்பதாம் போளஞ் சவுக்கார மூங்க மூதைப்பயசு
அப்ரகங் காடியின் காரமொ டாறுமுப் பத்திரண்டே (81)

ஆறுமுப் பத்திரண் டாம்வகை யெவ்வொன் றதுநயன
மாறு படச்செய் யணங்குதொண் ணூற்ரே டறுவகையை
வேறு படச்செயு மென்றுரைத் தோமிதன் விடமறுசீர்
கூறுநா தாக்கநா லுண்மை யறிந்துகொண்
(டோர்தமக்கே (82)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம்

விரோசனமாகும் சரக்கு வகைகள்

பெருகு பேதியினங் கடுகு ரோகணியும்
பெருகுவ் வாகைநேர் வாளமும்
திருகு கள்ளிகொடிக் கள்ளி காரவில
தைவி ளங்கமுங் குமரியின்
சருகு சோறுகரி பவளம் பத்தியமுஞ்
சதுரக் கள்ளி வெண்காக்கணம்
முருகு கொட்டைகளிப் பாக்கு சிவதையும்
மூக்கு ரட்டைசூர் ஆவரை (83)

சூரத் தாவரை நீரு வெட்டிமுத்
தோடு மான்செவிக் கள்ளிகார்
சீரத் தோடுபேய் குமட்டி யாதளேச்
சகுன மாமணக் கெண்ணெய்வெண்
காரத் தொடுரச பூரஞ் சேவிதை
கானி னேரண்ட்ம் முடக்கெத்தான்
சாரத் தோடுகலேச் சந்த்ர னுப்பொடு
சவுட்டு உப்புபூ வரசுரி (84)

பூவ தானசிற் ருமரையினெடு
பிரமி யாகமுப் பத்துநா
லாவ தாம்பெரு விரோச னம்மிவைக
ளாய்ந்து தேர்ந்துபன் னூன்முறை

நோவ தானவை நிவார ணத்தொகுதி
நேர்மை யாயுரை செய்துளேன்
பூவு ளார்க்குறு வியாதி யுந்துலைய
பொற்பு றப்பிடகர் புகழவே (85)

கிருமிச் சத்துரு வகை

கிருமிச் சத்துருவைக் கேளுதிப் பிலியுங்
கோடசாலை யொடு காயமுங்
கரிய காக்கணம் பரங்கிப் பட்டையும்
காட்டுச் சீரகம் ஈருளி
கரிய சீரகம் பங்கம் பாளைசரக்
கொன்றை புரசவிரை சுண்டைக்காய்
கருந்து ழாய்நில வாகை கொக்குகறி
கடுகு ரோகணியு மணலியும் (86)

மணலிக் கீரைசிறு குருவி மாமிசமு
மிதியின் பாகலிலை யதனொடு
குணம தானபழு பாகல் மூலமிது
கூறி னேம்வகையொ ரிருபது
குணம தாகவெகு கிருமிக் கூட்டமதைக்
குலைத்த ழித்துவெகு குக்கிநோய்
குணம தாக்குமென வுலகில் வைத்தியர்கள்
குலவு வான்புகழ தடையவே (87)

கிராணி அதிசாரம் நிவாரணிகள்

கிராணி நோய்களதி சார நோயுமலக்
கெடுதி யாமிவைக ளொழியவே
புரசம் பட்டைசேங் கொட்டை வாலுளுவை
பொன்மு சுட்டைவேர் ஜாதிக்காய்
அரச தாம்பிரண்டை முசுட்டை வில்வவே
ராளைக் கொம்பனதி விடையமும்

கிராம்பு கசகசா மல்லி சீரம்பெருங்
காய முள்ளிவசம் போமமும் (88)

ஓம மோடுமுருங் கையு ரீயுருவி
யொதிய வேர்குரா சாணியாம்
ஓம முஞ்சடா மாஞ்சில் பீதலூ
மத்து வித்தபின் விளாம்பிசின்
வாம மாங்கஞ்சா ஜாதிப் பத்திரியும்
வாலெ லிக்கறிவ ளுத்தியின்
தாம முங்கட லிராஞ்சிப் பட்டைபொடு
தலையு முக்கடுவெள் வேற்பட்டை (89)

பட்டை யோடுநல ஜாதி லிங்கமும்
பரங்கிப் பட்டையுங் கரியவேல்ப்
பட்டை கட்டுக்கொடி வேருங் காடியாம்
பாணிசீந்திலோ டிலவங்கப்
பட்டை யாவரை யதின்ச மூலம்வெப்
பாலை யின்அரிசி நர்வலின்
பட்டை பூமுஸ்தை முள்ளுக் காவளையும்
பரிதி வேளைசிறு நாகப்பூ (90)

நாகப் பூவுமா துளச மூலங்கா
னத்தின் மல்லிகை வேரதோ
டாக வைம்பதொவ் வொன்ற தும்அதிர
சா நோயொடுகி ராணிநோய்
யாக வந்தவினைக் கவுழ்த மாமிதை
யளித்தி டவெகு குணமதாம்
சோக மாக்கிடு மலக்க ழிச்சலறச்
சொன்ன தாமிவை பாருமே (91)

சீதக் கடுப்பு ரத்தக் கடுப்பு நிவாரணிகள்

சீத மோடுரத் தக்க டுப்பிவைகள்
தீர்த்தி டும்வகை செப்புவோம்

சூத கொட்டையின் பருப்பு மாதுளைபிஞ்
சோடு மாசக் காய் யீருளி
பூத மாங்கரப் பானின் பட்டையொடு
புளியின் கொட்டைமேற் றோலதும்
மேதி வெண்தயிரு அவரை யவுரியிலை
மிளகு தக்ககா ளியினிலை (92)

இலைக ளாப்பழஞ் சிறிய நாகப்பூ
எலுமிச் சைப்பழங் குளிமிட்டான்
தலைசு ருளிவேர் காசுக் கட்டியும்
ஜாதிக் காயொடு மிலந்தையின்
இலைய ரம்பைபிஞ் சோடு பூபழமி
லவங்கப் பட்டையும் கரியவேல்
இலையி னோடுபெருந் தும்பை பத்திய
மிணங்கு தும்பைகரி.வேப்பிலை (93)

கரிய தாமபினி மணலிக் கீரைகற்
கடக சிங்கியுளி வெந்தயம்
கரியின் தோலம்மாம் பச்சி லைமருக்
காரை வேர்நரி மிரட்டியும்
மறியின் பாலுமெழுத் தாணிப் பூண்டுவே
மங்கி ராம்புவெதுப் படக்கியும்
சிறிய முட்டியிள நிம்பப் பத்திரியுஞ்
சிற்ற ரத்தைபா வட்டங்காய் (94)

காய்ந்த சுண்டைக்காய் நெல்லிக் காயிலாங்
கலியின் பாளைவல் லாரையும்.
ஆய்ந்து ரைத்தனம் பன்னல் பிஞ்சுநெய்
தற்கி ழங்கொடு பாச்சொற்றி
யாய்ந்து பாரிவை யைந்து பத்துமூன்
றுமு றைபவிழ்த பாகமாய்

யீய்ந்தி டீர்கடுப் பிரத்தஞ் சீதமிவை
யேயொ ழிந்துசுக மாகிடும் (95)

இரத்தமூல சீழ்மூல நிவாரணிகள்

ரத்த மூலஞ்சீழ் மூல நோய்நிவா
ரணியதின் வகை செப்புவோம
அத்திம் பிஞ்சுஉர லாம ணக்கினிலை
யன்றி லின்கறி பன்றிநெய்
சுத்த வெண்மையாங் கீரைத் தண்டுகவிழ்
தும்பை யின்னிலை கோஷ்டம்வெண்
துத்தி நாயுருவி நாக மல்லிபேய்ச்
சுரையி லைமிள காயுகாய் (96)

உகாயின் வேருகாட் டாம ணக்கிலை
யுடும்பு நெய்கதலிக் கந்தமும்
சகத்தின் கன்னல்மூ லம்வி டத்தையிலை
சன்ன மாம்லவங்கப் பட்டையும்
தகரின் மாங்கிஷமு மொந்தன் வாழைக்கனி
தரணி யாவரைவெண் காரமும்
சகத்தின் நாதங்கூ லப்ப ழம்பஸழய
தனியன் கந்தமு மளங்குதா (97)

தூய மாதுளம் பூவு தென்னங்குருத்
தோடு பாளைபூங் கோரையும்
தூய வெள்ளைபூண் டொட்ட ரைமரத்
துறுசி வைபரங் கியினதல்
ஆய திந்தவகை கரிய வேலினீர்க்
காக மூன்றுபத் தாறதும்
சீயின் மூலமிகு ரத்த மூலநோய்
செகுத்தி டுமென வுரைத்தனம் (98)

சூலை கிரந்தி நிவாரணிகள்

சூலை நோய்கிரந் தியின்வ கைக்குசத்
துருது ரோணமுங் கடுவனும்
பாலைப் பட்டைசேங் கொட்டை யுஞ்செவியம்
பழுவ வாமணக் கிலையு நாய்
வேளை மேனிபொடு தலையு நீரடி
வித்து மத்தனிலை சங்க வேர்
வீளி வேர்பிரமி சுடுது ரத்தியின்
வேரு சூரணம் வேம்பினெய் (99)

வேம்பி னெண்ணெய்சிறு நங்கை யிண்டுவேர்
விழுதி பன்னம்வெண் சாரணை
வேம்பு ஆடலின் பட்டை மையிதழி
வேர்நு ணுவுரி புராந்தகன்
வேம்பு வட்டமாங் கிலுகி லுப்பையும்
வேலிப் பன்னல்சுக் கிஞ்சியும்
பாம்ப ணிந்தசிவன் விந்து வீரமும்
பரை இ லிங்கமும் கெந்தியே (100)

கெந்தி வெண்கலப் பற்ப மோடுசோ
கியும் வளையலின் உப்பதும்
இந்து உப்புசவுட் டுப்பு வன்னவுப்
பிருப்பை வேர்சிறு செருப்படை
வெந்த நாகங்கார் வங்கங் கள்ளிப்பால்
விழல ரீசியெள் ளிருநிலக்
கந்தங் காட்டுச்சி ரியுங்கற் றுழையுங்
கழற்சி யின்இலை!யழிஞ்சிலே (101)

அழிஞ்சி லோடுமுள் ளங்கி மூலநெரி
யரிசி கோகுவின் லத்தியும்
இழிந்த தானபூ வந்தி குஞ்சவில
ைதக ளச்சினைத் தண்டுலம்

மொழிந்த னம்வளைக் குப்பி யைம்பதுமு
மூன்ற தாம்வகை சரக்கிதால்
ஒழிந்து ஓடுமிகு கிரந்தி சூலையீ
ரொன்ப தும்ரவிமு னிசியென (102)

சூலைக் கடுப்பு பிடிப்பு நிவாரணிகள்

கடுப்பு சூலையின் பிடிப்ப தானநோய்
களினி வாரணி கழறுவோம்
சுடுது ரத்திவேர் சங்க வேர்தலை
சுருளி வேர்கொடி வேலிவேர்
கடுகு நெய்யுவெள் ளறுகு பிர்மவிருக்
கத்த தல்பெரிய வாகைவேர்
கடுநி றத்தகொடி வேலி வேலியாங்
காரி பாசம் வெண் துத்திவேர் (103)

துத்தி வேருசெங் கொட்டை தில்லையின்
ரூல துஞ்சருகு புங்கவேர்
அத்திப் பாலுகாய் வேரு நாய்க்கொட்டான்
அக்ர காரமும் விளங்கமும்
சுத்த வெள்ளைக்குங் குலியங் குக்கில்கருஞ்
சூரை யானசெம் பிச்சியும்
சுத்த வெள்ளையுப் பன்ன பேதியுந்
துருப்பு லாலுமா விப்பட்டை (104)

ஆவிப் பட்டையு முடக்கொத் தான்செவிய
மாயில் வேர் பரங்கிப்பட்டையும்
மாவி லிங்கையுரி கரிய கோழிக்கறி
மயிலின் காற்குருந் துசிலின்நெய்
பூவி லங்குசரக் கொன்றைப் பட்டையும்
பிரமி குத்துக்காற் சம்மட்டி
பாவி பாலையும் முத்தை நாரட்டாம்
பட்டை வேத்திர மூலமும் (105)

வேத்ர மூலநாற் பத்தி ரண்டினை
விளம்பி னேமிவை தனித்தனி
வேது பற்றுசூ ரணமும் லேகியம்
வெவ்வி னையறு தைலமும்
ஏத மற்றவல் லாதி யாம்வகை
யின்னும் பற்பல பாகமாய்க்
கோத தற்றமுறை யாய ளித்திடிற்
கொடிய சூலேநோ யில்லையே (106)

நெஞ்செரிவு நிவாரணிகள் - குறள் வெண்பா

இஞ்சிதேன் சுக்கெலுமிச் சுக்கற்சூர் மாதுளையும்
நெஞ்செரிவு நோயற நீக்கும் (107)

மார்புவலி வாயு நிவாரணிகள்
நேரிசைவெண்பா

மார்வலியும் வாயுவகை மாற்றத் தலைசுருளி
வேர்கடுகு சுக்குந்தை வேளைவேர் - கார்போளஞ்
ஜவ்வாதுஞ் சிங்கி தவளமா மேரண்டங்
கௌசிகநீர் பேய்ப்பு டல்வேர் காண் (108)

காண்சிக் குருத்தோ லுங் காயம் புளிப்பிரண்டை
மாண்பெறுவே லிப்பருத்தி வாகாக - மாண்பர்க்கு
வந்தமார் பின்வலியும் வாயுவகை நீங்கிடவே
இந்தவீ ரேழிசைத்தோமே (109)

விக்கல் நிவாரணிகள்

தாளிசையே லம்பீலிச் சாம்பல் பொகுட்டரத்தை
தாளிசையுந் தோலடலை தன்னெடுபூ - வாளியனும்
அக்கிரா காரகா ரத்தரிசித் தூளிவைகள்
விக்கல் நிவாரணியாம் விள் (110)

நீரெரிவு நிவாரணிகள்

இலவங்கப் பட்டையா லின்விதைவல் லாரை
இலவங்கப் பத்திரிகோ டைப்பூ - விலேகல்
மதமகத்தித் தோரு ளிசைபத் திரியும்
மதமறுமா வாழை மலர் (111)

வாழை மலரா வரைதண்ணீர் மிட்டாறே
டேழைந்து வாமீ திசைத்துளோம் - பீழையாம்
நீரெரிவு ரோக நிவாரணியாய் முன்னுரைசெய்
நீரிழிவுச் சத்துருவின் நேர் (112)

மூல முளை நிவாரணிகள்

மூல்முளை ரோக மொழிக்கும் வகைகருணை
மூலம் பிரண்டை கொடிவேலி - மூலம்
புளிய மடற்கிழங்கு பேய்ச்சுரையின் சேம்பின்
தளிரிலே வல்லாரை தாம் (113)

தாவக்கந் தம்மெருகன் சாறடையின் கந்தமொடு
மாவரையி னுத மரள்மூல - நோவை
யடக்குநா கத்த டலேகடுகின் னெய்யும்
அடக்குமுளை மூல மதை (114)

மருந்தீடு நிவாரணிகள்

மருந்திடுநி வாரணிவல் லாரை யகத்தி
பெரும் பூசிணேக்காய் பிராய்வே - ரருணப்
பழம்வேலிப் பன்னல் பசியநன் னரி
கழறினதிவ் வேழுவகை காண் (115)

தழுதணே நிவாரணிகள்

தழுதணே நிவாரணிகள் சங்கின்வே ரோடு
கழுதைப்பால் வட்டத் தகரை - பழுபாகைக்
கந்தஞ் சரக்கொன்றை கான அகத்தியின்வேர்
இந்தவா றந்நோய்க் கெமன் (116)

தேமல் நிவாரணிகள்

தேமல் நிவாரணிகள் செந்தாழம் பூகொட்டி
நேமியா வாரை நிலவாகை - தாமமர
வேர்திரிசா தம்புங்கு வித்துமரு தோன்றிசங்க
வேர்பூ வரசுரியாம் விள் (117)

பருப்படுவன் நிவாரணிகள்

பஃறொடை வெண்பா

பருப்படுவன் நீங்கவெண்ணெய் பச்சைஜவ் வாது
அரும்புனுகு சங்கு அகத்தி விஷமூங்கில்
சீதாவின் செங்கழுநீர் செண்பகவேர் பிம்பியிலை
சேதாம்பல் தோன்றிவிழு தித்தலங்கு ளப்பாலை
தாவுபரி வாலியிவை தாம் (118)

பிளவை நிவாரணிகள்

பிளவை வகைநீங்கப் பேர்வன்னி யின்வேர்
பிளவைப் பகையாயிற் புங்கு - களமை
நிறமுள்ளா னிம்பமா ணிப்பூண் டுகாய்வேர்
பரங்கிபங்கம் பாளைவி ராலி (119)

புண்களிலுண்டாகும் கிருமி நிவாரணிகள்

ரணங்களி லுண் டாங்கிருமி நாசனிக டான்றி
சுணங்ககொட்டா ணயில் துடியோ - டனல்கூடன்
வேம்பெண்ணெய் பாகல் விஷமுட்டி வாணிமரள்
வேம்பிலைபங் கம்பாளை விள் (120)

சிலந்திப்புண் வீக்க நிவாரனிகள்

இன்னிசை வெண்பா

சிலந்தியின்விக் கந்திரச் செப்புதூந் திவேய்
கலினை பிரமிதிரி காய நெரியரிசி
வெந்தயஞ்சிங் கம்யாளி வெய்யோரன்பா லெட்டிவிதை
சந்தப் பிரண்டைக்கந் தம் (121)

மேகக் கட்டி நிவாரணிகள்

வெட்டிவேர் காட்டா மணக்கிலைபா லூமத்து
எட்டிவிரை நாவி எருக்குப்பால் - தொட்டியாம்
பாசாணஞ் சேங்கொட்டை பாண்டில்ப்பிசின்பிரமி
மாசையா வாரை யிலையே (122)

இலவங்கப் பத்திரிந ரிக்கொன்றை யுங்குண்
டலமாங் கெருடன்மூ லம்பார் - பலமேகக்
கட்டியையிம் மூவஞ்சுங் காணும லேயகற்றுந்
துட்டவிட நீர்போந் துலை (123)

தாகங் களைப்பு நிவாரணிகள்

தாகங் களைப்பு தனையகற்றக் கற்கண்டு
வாகைவே ராலி வரிவரியும் - மாகதியின்
மூலம்பன் னீர்ப்பூ முசுட்டை யிலைகதலி
மூல்நறுந் தூபமுலைப் பால் (124)

பாலுமுத் தக்காசு பச்சையாம் வெட்டியின்வேர்
சீலக் கனியிஞ் சியுமலகின் - மூலம்
உடும்புநெய் சிற்றரத்தை யோடாம் பதினேழ்
அடுங்களைப்புத் தாகம் அடும் (125)

பித்த வெடிப்பு நிவாரணிகள்

பித்த விரிவு நிவாரணிசே ராங்கொட்டை
சுத்தநீ லத்துருசு சுண்ணும்பு - பித்தனின்
வேம்புவேர் பூவரசின் விறுபழுப் பாலம்பால்
சாம்பித்த விரலிதாற சாம் (126)

மயக்கம் நிவாரணிகள்

மயக்க நிவாரணில வங்கப்பூ காடிப்
புயக்கனி மாதுளையும் பாணி - மயிரோ

டிலாமிச்சு முன்னே இரண்டுஞ்செவ் வந்தி
எலுமிச்சு தேன்காரரை யே (127)

பீலிகை நிவாரணிகள்

பீலிகைநி வாரணிகேள் பேய்க்குமட்டி முப்பலையும்
மீளிகரு நாவியொடு வெள்ளெலியுங் - கேளீர்கான்
ஆமணக்குப் பஞ்ச லவணமரு தோன்றியுர
லாமணக்குச் சீரகமீ தாம் (128)

உதரநோய் நிவாரணிகள்

இன்னிசை வெண்பா

உதரநோய் நீக்க வுடுகாரான் நீர்மென்
சதனப்புள் ளின்னடியைந் தாமுப்புஞ் சுக்கு
கடுகுநெய் பேய்க்குமட்டி கல்லின் சவுடு
கடுகு வுரோகணியாங் காண் (129)

கெர்ப்ப நோய் நிவார்ணிகள்

கெர்ப்பநோய் நீங்கக்கொட் டாங்கரந்தை சேங்கொட்டை
வெற்புநிம்பம் பிப்பலமும் வெண்துத்தி - நற்பிரமி
பூநாகங் காயங்கார் போளம் விழுதியிலை
மாநா கரங்கழல் வல்லி (130)

வல்லியாம் வேலியின்வேர் மாகுருவிஞ் சிப்பூண்டு
சொல்லினே மீரேழ் சுகமுறவே - யல்லல்
அறமலடி பெண்ணெனும்பே ரற்றே யொழிக்குந்
திறன்மிக்க தொவ்வொன்றுந் தேர் (131)

வாயு சூதகக்கட்டி நிவாரணிகள்

வாயுவுஞ் சூதகக் கட்டி வகைநீங்க
நாயுருவி பேய்க்குமட்டி ரத்தபோ ளம்நாய்
கடுகுபுன்னைக் காய்வாளங் கச்சாந் தரையுங்
கடுமுன் முருக்கிருநான் காம் (132)

நீரைக்கட்டியாக்கும் வகைகள்

நீர்க்கட்டி யாக்குமினம் நெட்டி சிறுவிடுகொள்
நீர்ச்சுண்டி பொன்முசுட்டை நேராகும் - பார்சிறிய
கட்டுக் கொடியிலையுங் காண் ஐந்து மூலியிவை
கட்டுங் கனவிரதங் காண் (133)

வாந்தி விக்கல் நிவாரணிகள்

சத்திவிக்கல் நீங்கச் சதாபலவித் தும்பொகுட்டு
சிற்றரத்தை நெல்லிக்காய் தீம்பிரண்டை - நற்பீலிச்
சாம்பல் வலம்புரிக்காய் தாளிசையுந் தாளிசைதோற்
சாம்பல்சிந் திற்சர்க் கரை (134)

சர்க்கரை தேன்மிளகு தக்காளி ருத்திராக்ஷம்
அக்கிரா காரம் அரிநெல்லி - விக்கல்
அறுமிந்துப் பும்மல்லி யட்டியும் வில்வம்
நறுமா துளையா நவில் (135)

ஜலதோஷம் நிவாரணிகள்

ஜலதோஷம் பூங்கப்பச் சைப்பூரந் தூபம்
நலநாரி நொச்சிநிசி நற்சசிதி மூலம்
கருஞ்சேம்பை குங்குமப்பூ கார்நொச்சி குல்லை
மருண்மத்திப் பன்னிரண்டு மாம் (136)

சூரல் கம்மல் நீங்கநெய்க் கொட்டான் பழமும்
மரள் மூலஞ் சிக்குருகா மன்தேன் இருள்சிரம்
நாகமல்லி யுஞ்செவிய நற்சிரஞ் செம்முள்ளி
நாகவல்லி பீசபூர் ணம் (137)

நற்சிறுகாஞ் சோறி நரத்த நிசிதமர்த்த
நற்கனிக ருப்புமணத் தக்காளி - கற்பூர
வல்லிபதி னேழும் விரைந்தோந்தொண் டைக்கட்டு
இல்லாமற் செய்திடுமென்றே. (138)

உந்திப் புண்ணிவாரணிகள்

உந்திப்புண் ணீக்குமின மோதவா தாம்பருப்பு
வெந்தயநா வற்பூவா வின்பாலும் - அந்த
அரம்பைப்பூ செம்மறி யாட்டுப்பால் மல்லி
யரம்பைக்காய் கோழியண்ட மாம். (139)

அண்டமா சக்காய்தேற் றுவித்து கார்ப்பாசத்
தண்டணிப்பால் தேங்காய்த் தனிப்பாலும் - நன்றுங்
கடுதாண் றி நெல்லியின் காய்சிறிய கீரை
கடுந்தழ லாத்தியாங் கான். (140)

வலிப்பு இசிவு நிவாரணிகள்

வலியிசிவு நீக்கும் வகைமுயல்கா கஞ்ஞு
மலிநெய் முசுரண்ட வான்நெய் - வலியதா
மேதியின் கொம்போடு வேசரியின் காற்குழம்பு
மேதையோ ஞன்நெய்யா மே. (141)

மேலாஞ்சூ டன்சேம்பு வெள்ளுள்ளி பேய்த்தும்பை
மேலா மரத்தையும் வேம்பின்னெய் - பாலாம்
வராகங் கடுகுதா மம்புன்னை நேயம்
வராதறுக்கு மைவலிப் பை (142)

கருப்பத்தை அழிக்கும் வகைகள்

கருப்பமழிக் கும்மினங்கள் கச்சாங் தரையும்
எருக்கம்பால் சூடனுஞ வின்வேர் - திருகிய
கள்ளிப்பா லும்மதளைக் கந்தமொடு பூமிக்கு
மிள்சணம் புஞ்சவுட்டுப் பே (143)

வாந்தியை உண்டாக்கும் வகைகள்

வாந்தியினம் வாளம் மருக்காரை தேற்றுமே
லாந்தோய் துரிசை யவிசேவும் - வாந்திமிகும்
பேயப்பீர்க்குங் கூடரப்பு பேய்ச்சுரை சியக்காய்
ஈத்தலைபா லாமொடுவை யே (144)

திரிதோஷ சமனிவகை

திரிதோஷ நீக்குமினஞ் செப்பக் கொடிமுந்
திரியாமோர் நெல்லி திரையல் - அரிநெல்லி
வெப்பாலே யின்னரிசி விண்விந் திலாமிச்சு
வெற்புத் துடிபெருங்கு மிள் (145)

பெருங்குசத் தோலோடு பீடுபனிக் கட்டி
யருங்கனிய தாம்புளிவி ழல்சீர் - அரிசி
மருக்காரை வேரும்மூ வஞ்சுதிரி தோஷம்
அறுக்கும் அடைவுள்ள தாம் (146)

தாய்ப்பாலூறச் செய்யும் வகை

தாய்ப்பாலூ றக்குளிமிட் டானுங்கச் சாந்தரையுந்
தூய்வெண்கீ ரையுள்ளி சொன்னேந்தாய்ப் பால்பெருக
ஆல்விழுது கோரோ சனையோ ரிதழ்க்கமலம்
ஆல்வித்துச் சிற்றனபா தம் (147)

அரையாப்பு நிவாரணிகள்

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

அரையாப்பு நோயை யறுத்திடு மினங்க
ளாயில் வேர்காணஞ்சுண் ணம்பு
கரஞ்சகவேரு பொடுதலை மூன்றுங் கடுகுசேங்
கொட்டை வெள் ளுள்ளி
பரவையின் வேந்து மூலமுங் கவிழ்தும்
பையொடு மிரச கற்பூரம்
உரமிகு சித்ர மூலமீ ராறும்
ஒழித்திடும் அரையாப்பு நோயை (148)

சிரங்குபுண் நிவாரணிகள்

சிரங்குபுண் கரப்பான் சொறிநிவா ரணிகள்
செப்புவோம் வீழிவே ரவுரி
நரளையின் கிழங்கு ஆடுண மூலி
நாய்க்கொட்டான் புங்கவேர் தகரை

மாளதன் கிழங்கு நஞ்சறப்பாயு
மாமூலி மிளகுதக் காளி
புரசதின் வித்து அப்பையின் கிழங்கு
புன்னைப்பூ செருப்படை கரிப்பான் (149)

கரியசி ரகமும் வேலியாம் பருத்தி
கழுதையின் பால்குளப் பாலை
கரியதாம் நொச்சி முடக்கொத்தா னுஞ்செங்
கத்தாரிப் பட்டையு மரத்தை
சிறியகாஞ் சோறி பரங்கியின் பட்டை
செவ்வல்லிக் கொடிவிளா வரிசி
சிறியதாஞ் சின்னி யைவிரற் கோவை
சிவன்வேம்பு மிருதாரு சிங்கி (150)

மிருதாரு சிங்கி கஸ்தூரி மஞ்சள்
விளங்கமு மான்செவிக் கள்ளி
பெருஞ்சிர மிளகு மஞ்சளும் பச்சைப்
பூரந்தக் கோலம்வெள் ளறுகு
மருக்காரை கானங் கோழியின் கறிபூ
வரசதின் பட்டைவெட் பாலை
கருக்குவா யிலைசதா வேரியின் கிழங்கு
கடுகுரோ கிணிமரு தோன்றி (151)

மருதோன்றி பூனைக் காலியின் வித்து
வன்னிப்பட் டையிலைக் கள்ளி
கருவேலின் வேருங் குராசாணி யோமங்
கழுதையின் லத்திகுங் குலியம்
அரும்பொனு வாரை சரக்கொன்றை கார்கோ
லரிசிவக் கணத்திவேர் சாந்தம்
கருஞ்சேம்பி னிலைநீர் வெட்டியாம் முத்து
காளவித் தெழுத்தாணிப் பூண்டும் (152)

பூண்டுகாட் டாம ணக்கிலை வாழை
புங்குநெய் யொடுசிவ கரந்தை
வான்படர் கெருடன் மூலநீர்ப் பூலா
மத்தன்காய் ரசங்கெந்தி லிங்கம்
வான்புண்ட ரீகங் குமிள்பழம் வட்ட
மாங்கிலு கிலுப்பைதேள்க் கொடுக்கு
பாண்டுசா ரணைமூ லஞ்சங்குக் குப்பி
பசியபொன் முசுட்டைபேய் மிரட்டி (153)

பேய்மிரட் டியுந்தேங் காயிநெய் யிலுப்பைப்
பிண்ணுக்கு தாளிசைப் பத்ரி
பாய்பரிக் கந்தங் குரட்டையி னிலையும்
பசுநுணு வுரிசுடு துரத்தி
யாய்ந்துரைத் தனந்தொண் ணூறதாஞ் சரக்கும்
அரிப்பொடு சிரங்குபுண் கரப்பான்
மாய்ந்திடச் செய்யும் வகையிது வெனமா
மாத்திர ரெளிதறிந் திடவே (154)

சிலந்திபுண் புரைவீக்க நிவாரணிகள்

புண்புரை வீக்கஞ் சிலந்திநோ யறவே
போக்கிடக் கிரந்திநா யகமுந்
திண்கரிப் பட்டை யாலம்பால் கரிய
சேம்பிலை யம்மாம்பச் சரிசி
சின்னவா மணக்கி னிலையுமுத் தெருக்கின்
செவியின்வே ராவரை யிலையும்
உண்மத்த மூலி யிலையர ளிப்பூ
ஒதியவேர் அரக்குமீ ராறே (155)

கால்கையில் விழுங் கறுப்பு நிவாரணிகள்

காலினிற் கையில் விழுங்கறுப் பறுக்கக்
கழறுதுங் காட்டுச்சீ ரகமும்
தாலமாம் பனையின் கிழங்குவல் லாரை
தாமரை யமுக்குராக் கிழங்கு

காளமாம் வித்து துத்திவித் தேழாங்
கையினிற் கால்களிற் பொருந்துங்
காளமாம் நிறத்தை யகற்றுமொவ் வொன்றுங்
காணுவீர் செய்வகை முறையே (156)

குஷ்டரோக நிவாரணிகள்

குட்டமுங் குறைநோய் நிவாரணி கேளு
குருவிஞ்சிப் பூண்டுவாய் விளங்கம்
எட்டியின் வித்து சங்கவேர் ஜாதி
இலிங்கஞ்சவ் வீரந்தா ளகநீர்
வெட்டிடு முத்து தாம்பிர பஸ்பம்
மிகநாறும் பூவுசேங் கொட்டை
கட்டியாங் கொடிவேர் பழுபாகல் மூலங்
கற்ருழை வேர்திரி கடுகு (157)

திரிபலை வேம்புப் பட்டைநாய்க் கொட்டான்
சிவன்வேம்பு வெப்பாலை வேரு
கரியசீ ரகமும் ஆயில்வேர் பிராய்வேர்
கருடனின் கிழங்குபுங் கதின்வேர்
கரியத நெருஞ்சில் காட்டுச் சீரகமும்
கடுகுவெள் ளறுகுபொன் முசுட்டை
திருகிய கள்ளி யாடுண மூலி
செவ்வல்லிக் கொடி செருப்படைவேர் (158)

செருப்படை வேரு பிரமிவேர் சடைமாஞ்
சில்விழ லரிசியிந் துளக்காழ்
எருக்குவே ருசில்மூ லஞ்சங்குக் குப்பீ
இளநெறி யரிசியு நாவி
கருக்குவாய் மூலந் தலைசுருள் மூலி
கதிரை வே ரொடுமரட் கிழங்கு
திருக்குவே செவியா மல்லிய தொடுந்துத்
திப்பரல் மருதுரி தோன்றி (159)

தோன்றியின் பூவுஞ் சரக்கொன்றை யதின்வேர்
சொல்லிய வைம்பத்தி ரண்டுந்
தோன்றிய புண்ணுங் குட்டமுங் குறைநோய்
தொலைத்திடு மொவ்வொரு சரக்கும்
வேண்டிய படியே பற்பல வகையாய்
விஷமதாங் குணமதை யறுத்து
ஈண்டுரை செய்த சரக்கினை மருந்தா
யிழைத்திடப் பலவிதப் பிணிபோம் (160)

உதராக்கினியை விர்த்தி செய்யும் வகைகள்

உதரஅக் கினியை யதிகம தாக
வுண்டுபண் ணிடும்வகை கேளு
வதரிகூ விளைசெண் பகமர வேரு
வான்கனி விளாநார்த்தை பாலை
உதளிநற் சீரந் திரிகடு கடுகு
உள்ளிசீ ரகம்பெருங் காயம்
மதகரிக் கலினி கண்டதிப் பிலிவால்
மரீசிதா ளிசைவிழ லரிசி (161)

விழலத னரிசி இஞ்சிதேன் கஞ்சா
வேளைப்பூ கஸ்தூரி மஞ்சள்
களவின்வேர் சங்கு மூலமு முன்னை
கண்டங்கத் திரியின்காய் பிரண்டை
துளசிபா வட்டை யிலையெவாச் சாரஞ்
சுவர்ணபஸ் பஞ்சிவ கரந்தை
இளங்கொட்டைப் பாக்கு செந்திராய் மூலி
இலையுஞ்சீ தேவியு மரசு (162)

அரசதின் பட்டை சுண்டைவ ற்றல்பே
யரட்டியுங் கருணையின் கிழங்கு
உரம்பெறு மிளகாய் ஓமமு நாற்பத்
தொன்றதாஞ் சரக்கிவை முறையே

உரம்பெறச் செய்யும் பசியதை நன்று
யோங்கிடச் செயு மென வுரைத்தோம்
திரமதாய் வகையே செய்திடப் பலிக்குஞ்
செகுத்திடு மசீர்ணமாம் நோயை (163)

தலைவலி நிவாரணிகள்

தலைவலி நோவு நீக்கிடும் வகைகேள்
தமரத்தம் பழமொடு அவரை
இலைகரு நொச்சி மட்டிப்பா லோடு
மினியசெந் தாழம்பூ சவுரிப்
பழங்கருஞ் சீரஞ் சூத்திர! நாவி
பசுநிசி நாணஞ்சவ் வாது
செழுங்கருஞ் செம்பை வலம்புரி மலர்கிச்
சிலிசாம்பி ராணிநா கணமே (164)

மாந்தங் கணம் பிரளி நிவாரணிகள்

மாந்தநோய் கணங்கள் பிரளிகள் நீக்கும்
வகைகடு ரோகிணி வசம்பு
பூந்திரு நீற்றுப் பச்சைநீர்ப் பூலா
பிரண்டைதூ துளை தும்பை யவுரி
வேம்பிலை யீர்க்கு வெண்கலபற்பம்
விழுதியின் இலையொடு முருங்கைக்
காம்புநாய்க் கடுகு வேலியாம் பருத்தி
கற்பூர வல்லியு மஞ்சள் (165)

மஞ்சள்வெள் ளுள்ளி நிலக்குமிள் செவ்வா
மணக்கிலை தைவேளை யோமங்
கஞ்சமாங் கோரை குளிமிட்டான் கரிய
காக்கணந் தழுதாழை யிலையும்
வஞ்சப்பேய் மிரட்டி பொடுதலை காயம்
வளர்சிறு பீளைபேய் முசுட்டை
யஞ்சவெப் படக்கி யாமையோ டிருளி
யாகுமிம் முப்பத்து மூன்றே (166)

தாகம் நாவரக்ஷி நிவாரணிகள்

தாகநா வரக்ஷி நீக்கிடும் வகைசெந்
 தட்டிநார்த் தைக்கனி களாவேர்
ஆகுவின் செவிக்கீ ரைநெல்லி முள்ளி
 யரிநெல்லிக் காய்விடத் தையின்வேர்
நாகமாம் நெறிஞ்சில் வெந்தயஞ் சீரம்
 நன்னாரி துளசிருத் திராக்ஷம்
வாகுசேர் முத்துப் பவளமுப் புரண்டி
 வால்மிள கிலுப்பைப்பூ நெருஞ்சில் (167)

நெருஞ்சில் வெள்ளீய பற்பந்தா ளிசையு
 நெற்பொரி விளாபற்ப டாகம்
பெருஞ்சீரம் பச்சைப் பூரந்தும் பைப்பூ
 பேய்ப்புடல் செவியம்ரஸ் தாளிக்
கரும்புகுங் குமப்பூ பலகரை பற்பம்
 கற்கண்டு திப்பிலி மூலம்
திருமரத் துளிரு வித்தக்கிர காரஞ்
 செம்பீரப் பழமதி மதுரம் (168)

மதுரமுஞ் சன்ன லவங்கத்தின் பட்டை
 மாதுளைக் கனியொடு மருதின்
அதல்விலா மிச்சுகற் சூர்க்கனி முசுறு
 அண்டமுத் தக்காசு நாற்ப
ததனெடு ஆறு சரக்கிதையே முறையே
 யருந்திடத் தாகநா வரக்ஷி
யதுவகை யெட்டும் அழிந்திடும் நாவு
 அமிர்தவூற் றெடுத்திடும் பாரே (169)

அடிபட்ட வீக்கம் இரத்தக் கட்டு நிவாரணிகள்

அடிபட்ட வீக்க நிவாரணி மெழுகு
 ஐவிரற் கோவைசா ரணைவேர்
கொடிவேலி வேருங் கௌரி பாஷாணம்
 கொல்லன்கோ வைக்கிழங் கோடு

பொடுதலை யாளி விரையஸ்வ கெந்தி
பூவர சுரிதலை சுருளி
நெடும்பனைக் கோவை மஞ்சள்வெள் ளாட்டு
நீர்பூமிச் சர்க்கரைக் கிழங்கு (170)

கிழங்குகஸ் தூரிமஞ்சளும் வட்டக்
கிலுகிலுப் பையக்கிர காரம்
செழுமுயற் காது இலைசதை யொட்டி
சில்லங்கார் போளநத் தைச்சூர்
கொழுங்கழைக் குருத்து எருக்கதின் பட்டை
கூறினேம் மரளதின் கிழங்கும்
அழுந்திய அடியால் வந்திடும் வீக்கம்
அகற்றுமிவ் விருபத்து ஆறே (171)

ரணநோய் நிவாரணிகள்

புண்வெகு ரணங்கள் நிவாரணி பிரமி
புளியிலை மான்செவிக் கள்ளி
புன்னையி னின்நெய் நீரடி வித்து
பூவர சதின்சமூ லம்வேம்
பெண்ணெய் தேட் கொடுக்கு நிலவிளா பருத்தி
யிலைமயிர் மாணிக்கந் தொழுத
கண்ணிவேம் பாடம் பட்டைபா திரிவேர்
கடுக்காய்பூ வெள்ளையாட் டுப்பால் (172)

வெள்ளைக்குங் குலிய நுணாவின்வேர்ப் பட்டை
விராலிமுட் டுளசிகிழ்க் காயாம்
நெல்லி காட் டாமணக்கிலை வாழை
நீர்கொடி வேலிவேர் பிளவை
கொல்லிபூ லாவின் கிழங்குவூ மத்து
கோடக சாலைநா வல்வேர்
வெள்ளிதாம் பிரந்தா ளகஞ்சிலை லிங்கம்
வீரழிர் தார்சிக்சி துத்தம் (173)

துத்தமுங் கோரோ சனைசரக் கொன்றை
துளசிவட் டக்கிலு கிலுப்பை
துத்தியுந் தகரை யிலைகிழு வையின்வேர்
தொய்யிற்கீ ரைசிறு நெருஞ்சில்
முத்தெருக் கிலையு மஞ்சளும் நரளை
மூலமும் பரங்கியின் பட்டை
வத்தங்கி மூலி யைம்பத்து ஒன்று
வரைந்தனம் ரணநிவா ரணியே (174)

கற்றுழை நாற்றம் நீங்கிடச் கோரைக்
கந்தமா வாரைப்பூ கோஷ்டம்
பற்றிய சுரோணி தக்கட்டி நீங்கப்
பார்சிலா சத்திலை நரளை
சிற்றரத் தையுங்கூத் தன்குதம் பையுமாம்
தீச்சுட்ட புண்ணிற்குச் சூடன்
கற்சுண்ணம் வெட்டி வேர்பனங் கோவை
கற்கோவை மேனிதேங் காய்நெய் (175)

காற்காடு வனுக்குத் தகரைசெங் குன்றிக்
காழொடு மதுகப்புண் ணுக்கு
நீர்க்கோவை நீங்கத் தூதுளைப் பழமும்
நேராங்தீம் பாலைசெந் தொட்டி
வேர்தனக் குத்துக் கப்பையின் கிழங்கு
விரைமிகு வெட்டியின் வேரு
சாற்றினேங் கழலைக் கட்டிநீங் கிடவா
தளையுட வித்துகா யிலையே (176)

நரம்பிலுண் டான கட்டிகள் நீங்க
நறும்வெட்டி வேர்திரி பலையும்
பெரும்புள்நீர் ஓங்கற் சத்துகற் றுளசி
பிரசவ அழுக்குகள் நீங்க
அரியிலை களவேர் மாவிலங் குரியாம்
அதிவாயுக் குத்துகள் நீங்க

முருங்கையின் பட்டை கடுகாடா தோடை
முதிர்வேலிப் பருத்தியுஞ் சுக்கே (177)
* ஓங்கறசத்து. சிலாசத்து

நரம்பெனுஞ் சிலந்திதி ரக்கள்ளிப் பட்டை
நருவிலி வேர்சவட் டுப்பு
நரம்பினிற் பிடிப்பு மயில்நெய்சா ரையின்நெய்
நண்டதன் கொழுப்புமுத் தெண்ணெய்
திரம்பெற நிக்குங் கன்னத்தின் வீக்கந்
தீரநீ லியினிலை வசம்பும்
உரம்பெறு சுக்குத் திப்பிலி மிளகி
னுடுசித்த கத்தியி னிலையே (178)

தொண்டையின் வலிநீங் கிடூச்சிறி தாஞ்செந்
தொட்டிகோஷ் டந்தேவ தாரம்
கண்டதிப் பிலிகொம் மட்டிமா துளையின்
கனியுந்திப் பிலிரத்த வாந்தி
யண்டிடா தொழியத் துத்திப்பூ துணிசுட்
டக்கரி யெள்ளீணு வெருமை
தண்சாணப் பாலாம் விற்புரு திக்குச்
சவ்வீரம் விராலிகார் சேம்பை (179)

உதிரக்கட் டிற்கே சமுத்திராப் பழங்கல்
லுருவியின் பூண்டுகுங் குமப்பூ
அதிகக்கால் வலிநீங் கிடவாகை வெள்ளு
காநிம்பம் நாரட்டாம் பட்டை
கதித்தெழு துடையின் வாழைக்கே வீரங்
கருஞ்சேம்பை விராலியும் பூரம்
வதைத்திடு மிடுப்பு உளைவிற்குக் குதிரை
வாலியும் பொடுதலை யாமே (180)

ஆமிந்த நூலை யுலகிற்பண் டிதர்கள்
யாவரும் அறிந்துமே போற்றப்

பூமியி லென்றும் பொலிவுட னிலங்கப்
பூரணன் குருபதம் பணிந்து
நேமியோர்க் குரைத்தேன் ஷண்முக நாதன்
நேர்மைமா ருமநூற் றெண்ப
தாமிந்த ரோக நிவாரணத் தொகுதி
யரைந்தோம்நோ யற்றுவாழ் முற்றே

உரோக நிவாரணப் பொருள்த் தொகுதி என்னும்
பதார்த்தகுண விளக்கம்
முற்றிற்று.

★

உரோக நிவாரணத் தொகுதி

பரிபாஷை விளக்க அகராதி

அக்கிரா	அக்கிராகாரம்
அசுவகெந்தி	அமுக்குரா
அடலரசனுப்பு	வெடியுப்பு
அடலை	பற்பம்
அடவிக்கோழி	கானங்கோழி
அண்டத்தோடு	முட்டைத்தோடு
அண்டமாங் கெருடன்	ஆகாயக் கெருடன்
அதல்	பட்டை
அதளைக் கந்தம்	அதளைக் கிழங்கு
அதிங்கம்	அதிமதுரம்
அமிர்த சர்க்கரை	சீந்திற் சர்க்கரை
அம்போருகம்	தாமரை
அம்மான் பச்சிலை	அம்மான் பச்சையரிசி
அரம்பை	வாழை
அரியிலை	மூங்கிலிலை
அருங்கனிப்புளி	பழம்புளி
அருணமாம்வேளை	நாய்வேளை
அருணப்பழம்	எலுமிச்சம்பழம்
அர்த்தப்பூ	சிறுநாகப்பூ
அலகுமூலம்	இலாமிச்சை வேர்
அளங்குதா	அளங்கு மாமிசம்
அறல் காடி	காடி நீர்
அன்னவுப்பு	கரியுப்பு
ஆகுவின் செவிக்கீரை	எலிச்செவிக் கீரை
ஆடுணா மூலி	ஆடுதின்னாப் பாளை

ஆணிப்பூண்டு	எழுத்தாணிப் பூண்டு
ஆதளைச் சகுனம்	ஆதளைக்கிழங்கு
ஆமிலம் பெறுகீரை	புளிச்சாக்கீரை
ஆமோர்	பசுவின்மோர்
ஆம்மிட்டான்	தண்ணீர் மிட்டான்
ஆலமூங்கில்	விடமூங்கில்
ஆலி	ஆலங்கட்டி
ஆவரைப் பஞ்சாங்கம்	ஆவரையின்பட்டை, இலை, காய், பூ, அரிசி
ஆவின் பால்	பசுவின் பால்
இங்குலிகம்	ஜாதி லிங்கம்
இணங்கு தும்பை	கவிழ் தும்பை
இந்துளக் காழ்	கடம்பவித்து
இருட்சிரி	கருஞ்சீரகம்
இரு துத்தம்	துத்தம், துரிசு
இரு நிலக்கந்தம்	நிலப்பனைக் கிழங்கு
இருப்பை	இலுப்பை
இருளி	கருஞ்சீரகம்
இருள்சீரம்	கருஞ்சீரகம்
இலாங்கலி	தென்னை
இழிந்த பூவந்தி	நாய்க்கொட்டான்
இளநிம்பப் பத்திரி	வேப்பங் கொழுந்து
இனிப்பு நிம்பம்	சர்க்கரை வேம்பு
உடு	வெள்ளாடு
உதளிநற்கிரம்	வெள்ளாட்டுப் பால்
உந்துருப் புலால்	பெருச்சாளிக் கறி
உப்பிலா வள்ளி	உப்பிலாங்கொடி
உரி	பட்டை
உருக்கினக்காரம்	வெண்காரம்
உருவி	நாயுருவி
உன்மத்த மூலி	ஊமத்தை
எஃகு	உருக்கு

எருவை பஸ்பம்	செம்பு பற்பம்
எவச்சி	எவச்சாரம்
எழுத்தாணிப்பூண்டு	முத்தெருக்கன்செவி
ஏரண்டம்	ஆமணக்கு
ஐந்துப்பு	பஞ்சலவனம்
ஐயவி	கடுகு
ஒட்டிப்பட்டை	பிசினிப்பட்டை
ஒப்பில்லான்மூலி	ஈசுரமூலி
ஒருதலத் தாமரை ஓரிலைக் கஞ்சம் ஓரிதழ்க் கமலம்	ஓரிலைத் தாமரை
ஓரி நகம்	நரி நகம்
கணம்	திப்பிலி
கதலிக்கந்தம்	வாழைக்கிழங்கு
கதலிமூலம்	வாழைக்கிழங்கு
கந்தம்	கிழங்கு
கடுங்கசப்பாம் மூலி	ஆடுதின்னாப் பாளை
கடுவன்	மாவிலிங்கு
கடுநிறத்த கொடிவேலி	கருங்கொடி வேலி
கரஞ்சகம்	புங்கு
கரி	யானை
கரிக் கொம்பு	யானைத் தந்தம்
கரியபவளம்	கரியபோளம்
கரிப்பட்டை கரியின் தோல்	அத்திப்பட்டை
கருவங்கம்	காரீயம்
கலினை	திப்பிலி
கலைச்சந்திரனுப்பு	இந்துப்பு
கல்யாணக் கரிப்பான்	பொற்றலைக் கரிப்பான்
கல்லின்சவுடு	அன்னபேதி
கவி	குரங்கு

கழல்வல்லி	கழற்கொடி
கழுதைப்பயசு	கழுதைப்பால்
கழுமுள்கனி	மாதுளங்கனி
களச்சினைத் தண்டுலம்	கார்கோலரிசி
களமை நிறமுள்ளான் நிம்பம்	சிவனார் வேம்பு
கற்சூர்க்கனி	பேரீச்சம்பழம்
கன்னல்	சர்க்கரை
கன்னல் வேம்பு	சர்க்கரை வேம்பு
கன்னிவெண்சோறு	குமரிச்சோறு
காடிப்பயம்	காடி நீர்
காட் டேரண்டம்	காட்டாமணக்கு
காணம்	கொள்ளு
காமன்	திப்பிலி
காயம்	பெருங்காயம்
காரகாரத் தரிசி	நாயுருவியரிசி
காரவிலதை	பாகல்
காராஞ்சீரம்	கருஞ்சீரம்
காரான் நீர்	எருமை மூத்திரம்
காரியாம்பாலை	கரும்பாலை
கார்வேம்பு	கருவேம்பு
கார்நிம்பயிலை	கருவேப்பிலை
கார்ப்பாசம்	பருத்தி
கார்போளம்	கரியபோளம்
காளவித்து	எட்டிவித்து
கானவள்ளி	காட்டுவள்ளி
கான அகத்தி	வீழி
கானின் ஏரண்டம்	காட்டாமணக்கு
கிரந்திகேள்வன்	கிரந்தி நாயகம்
கிராம்புரி	இலவங்கப்பட்டை
கிளைக்காற்கல்	நண்டுக்கல்
கிள்ளை	குதிரை

கீரம்	பால்
குஞ்சவில்லதை	குன்றிக்கொடி
குடவன்	பித்தளை
குண்டலக் கெருடன்	ஆகாயக் கெருடன்
குப்பை	சதகுப்பை
குமரி	சோற்றுக் கற்றாழை
குரவை நுரை	கடல்நுரை
குவ்வாகை	நிலவாகை
குல்லை	துளசி
குருகருக்கம்பூ	வெள்ளெருக்கிள்பூ
குன்றிக்காழ்	குன்றிவித்து
கூத்தனுங் கரந்தை	சிவகரந்தை
கூர்மத்தோடு	ஆமையோடு
கூலப்பழம்	பாகற்பழம்
கூவிளை	வில்வம்
கூளிபுடல்	பேய்ப்புடல்
கொலுமிச்சை	எலுமிச்சை
கோஉடுப்பை	பொன்னுங்காணி
கோர்குப்பல்	கழுதைப்பல்
கோக் கன்னல்கந்தம்	பூமிச்சர்க்கரைக்கிழங்கு
கோடரக்கனி	எட்டிப்பழம்
கோடைப்பூ	பாதிரிப்பூ
கோடொற்றை	காண்டாமிருகக் கொம்பு
கோரைக்கந்தம்	கோரைக்கிழங்கு
கோழியண்டம்	கோழிமுட்டை
கௌசிகநீர்	கூகைநீர்
சகத்தின் கன்னல்மூலம்	பூமிச்சர்க்கரைக் கிழங்கு
சகத்தின் நாதம்	காந்தம்
சசி	சூடம்
சதாபலவித்து	எலுமிச்சுவித்து

சதாவேரி	தண்ணீர்மிட்டான்
சந்தப் பிரண்டைக் கந்தம்	மணிப்பிரண்டைக் கிழங்கு
சம்பளம்	எலுமிச்சம்பழம்
சம்பீரப்பழம்	எலுமிச்சம்பழம்
சாகமாங்கிஷம்	வெள்ளாட்டுக்கறி
சாதிக்கிழங்கு	பிரப்பங் கிழங்கு
சாதிச்சி	ஜாதிப் பத்திரி
சாந்தம்	சந்தனம்
சாயாதேவி	சாயா விருக்ஷம்
சிக்குரு	முருங்கை
சிக்குருத்தோல்	முருங்கைப் பட்டை
சிங்கம்	சதுரக்கள்ளி
சிங்கபாணி	ஆடாதோடை
சிங்கி	மான்கொம்பு
சித்தான தேக்கு	சிறுதேக்கு
சித்தான லவுங்கவுரி	சன்னலவங்கப்பட்டை
சித்திர மூலம்	கொடிவேலி
சிம்பை	அவரை
சிவன் விந்து	இரசம்
சிவன் வேம்பு	சிவனர் வேம்பு
சிவன்மூலி	தலைசுருளி
சிவை	வேர்
சிலை	மனோசிலை
சிலையின்சத்து	சிலாசத்து
சிலைமதம்	கல்மதம்
சில்லம்	தேற்று
சில்லிவேர்	தேற்றுவேர்
சிறியமுட்டி	சிற்றுமுட்டி
சிறுஅண்டம்	கோழிமுட்டை
சிறுகாஞ்சோறி	சிறுசெந்தொட்டி
சிறு குருவி	சிட்டுக்குருவி

சிறுபயர்	பாசிப்பயர்
சிறுமுட்டி	சிற்றுமுட்டி
சிற்றனபாதம்	சிறுசெருப்படி
சிற்றுமரை	ரோஜா
சீதை	நெய்ச்சட்டிக்கிரை
சீலக்கனி	திராக்ஷப்பழம்
சுடரெண்ணெய்	விளக்கெண்ணெய்
சுணங்கசொட்டான்	நாய்க்கொட்டான்
சுத்த வெள்ளையுப்பு	வளையலுப்பு
சுவணலோக விறையின் கோபம்	இந்திரகோபம் (பட்டுப்பூச்சி)
சூதக்கொட்டையின் பருப்பு.	மாங்கொட்டைப் பருப்பு
சூரணம்	கருணைக்கிழங்கு
சூரிவித்து	நத்தைச் சூரிவிதை
செப்பான முள்ளி	செம்முள்ளி
செம்மையாம் அல்லிப்பூ	செவ்வல்லிப்பூ
சேதாம்பல்	செவ்வல்லி
சேதுவாமணக்கு	சிவப்பாமணக்கு
சேவிதை	அழிஞ்சில் விதை
சேவ்	அழிஞ்சில்
சேராங்கொட்டை	சேங்கொட்டை
சோகி	பலகரை
சௌரிவல்லி	சௌரிக் கொடி
ஞமலிநெய்	மயில்நெய்
தண்டாமரைச் சகுனம்	தாமரைக் கிழங்கு
தந்தி நெருஞ்சில்	யானை நெருஞ்சில்
தருமஞ்சள்	மரமஞ்சள்
தவளமாம் ஏரண்டம்	வெள்ளையாமணக்கு
தழலாத்தி	மிளகுதக்காளி
தழுதாழை	வாதமடக்கி
தனிமுதலோன் வேம்பு	சிவனார் வேம்பு

தாசான்பூ	செம்பரத்தைப்பூ
தாமமரம்	கொன்றைமரம்
தாமம்	மலர்
தாமரையாள் மைந்தன்பூ	மதனகாமப்பூ
தாம்பூலி	வெற்றிலை
தாலமாம்பனை	நிலப்பனை
தாளிசை	தாளிசைப்பத்திரி
தாளிசைதோல்	செருப்புத்தோல்
தாளிசையுந்தோலடலை	செருப்புச் சாம்பல்
தாவக் கந்தம்	காட்டுக் கருணை
திரிகடுகு	சுக்கு, மிளகு, திப்பிலி
திரிகாயம்	உள்ளி, கடுகு, பெருங்காயம்
திரிசாதம்	நாகப்பூ, லவங்கப்பட்டை [லவங்கப்பத்திரி]
திருக்குவே செவியாம்மல்லி.	நாகமல்லி
திருமரம்	அரசமரம்
திருமாலின்தாரம்	அரிதாரம்
திரையல்	வெற்றிலை
தீமூலம்	சித்திரமூலம்
தீயனையதரு	சோதிமரம்
தீயனையபுல்	சோதிப்புல்
தீவேய்	விடமூங்கில்
துகிர்	பவளம்
துடி	ஏலம்
துட்டவரி	புலி
துத்தித் தாமம்	துத்திப்பூ
துத்திப்பரல்	துத்திவித்து
துந்துளச் செவியின்கீரை	எலிச்செவிக்கீரை
துரோணம்	தும்பை
துழாய்	துளசி
தூபம்	சாம்பிராணி

தேன்கறி	வால்மிளகு
தேன்காரை	மருக்காரை
தொழுத கண்ணி	தொழுகண்ணி
தோன்றி	மருதோன்றி
தோடை	ஆடாதோடை
நரந்தநிசி	கஸ்தூரி மஞ்சள்
நரிமிரட்டி	கிலுகிலுப்பை
நலநாரி	நன்னாரி
நவமணி	முத்து, பவளம், வைரம், வைடூர்யம், மரகதம், மாணிக்கம், கோமேதகம் புட்பராகம், நீலம்
நவலோகம்	தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வெண்கலம், தரா, பித்தளை
நறுந்தூபம்	சாம்பிராணி
நாகசிங்கி	பொடுதலை
நாகமாம் நெருஞ்சில்	யானை நெருஞ்சில்
நாகவல்லி	வெற்றிலை
நாணம்	கஸ்தூரி
நாய்வேளை	நாய்க்கடுகு
நார்	கல்நார்
நாறும்பூ	கெந்தகம்
நிசி	மஞ்சள்
நிம்பம்	வேம்பு
நீபமலர்	கடப்பமலர்
நீரடிமுத்து	நீர்வெட்டிமுத்து
நீலி	அவுரி
நுணவுரி	மஞ்சணத்திப்பட்டை
நேமியாவாரை	நிலாவரை

நேயம்	நெய்
பச்சை	திருநீற்றுப் பச்சை
பச்சைப்பூரம்	பச்சைக் கற்பூரம்
பசுநிசி	பச்சை மஞ்சள்
பங்கம் பாளை	ஆடுதின்னாப்பாளை
பஞ்சபாஷாணம்	அரிதாரம், வெள்ளை, கௌரி, லிங்கம், தொட்டி, ஆக. 5.
பஞ்சரசம்	ரசம், லிங்கம், வீரம், ரசசெந்தூரம், பூரம், ஆக 5.
பஞ்சலவணம்	இந்துப்பு, பாறையுப்பு சவட்டுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, ஆக 5.
பஞ்சலோகம்	பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்
பத்தியம்	கடுக்காய்
பரங்கித்தோல்	பரங்கிப் பட்டை
பரவையின் வேந்துமூலம்	கெருடக் கிழங்கு
பரிவாலி	குதிரைவாலி
பரிதிவேளை	நாய்வேளை
பரை	கௌரி பாஷாணம்
பலை	திரிபலாதி
பழுபாகைக் கந்தம்	பழுபாகற் கிழங்கு
பழுவ ஆமணக்கு	காட்டாமணக்கு
பழைய தனியன்	பழையதேன்
பனிப் பகைப்பல்	நாய்ப்பல்
பன்னல்	பருத்தி
பாணி	தண்ணீர்
பாணி மயிர்	வெட்டிவேர்
பாண்டுசாரணை	வெண்சாரணை
பாண்டில்ப்பிசின்	வாகைப்பிசின்
பாய்பரிக் கந்தம்	அசுவகெந்திக் கிழங்கு

பாலாம் வராகம்	வேலிப்பருத்தி
பாலூகா	வெள்ளூகா
பாவக மூலம்	சித்திர மூலம்
பாவிபாலை	வெப்பாலை
பித்தனின் வேம்பு	சிவனார் வேம்பு
பிப்பலம்	அரசு
பிம்பி	கோவை
பிர்மவிருக்கத்ததல்	பூவரசம்பட்டை
பிளவைப் பகை	பிளவை கொல்லிப் பூண்டு
பீசபூர்ணம்	கொம்மட்டி மாதுளை
பீத ஊமத்து	பொன்னூமத்து
பீதமாஞ்சாந்து	மரமஞ்சள்
பீலிச்சாம்பல்	மயிலிறகுச் சாம்பல்
புத்திரசீவி	கொட்டைக் கரந்தை
புவனவேர்	நாங்குளுப் பூச்சி
புராந்தகன்வேம்பு	சிவனார்வேம்பு
புளிமாதுளை	புளிப்பு மாதுளை
புன்னைநேயம்	புன்னைநெய்
பூங்கோரை	கஞ்சாங்கோரை
பூநாகம்	நாங்குளுப்பூச்சி
பூமிக்குமிள்	நிலக்குமிள்
பூரணி	இலவு
பூனை	பூனை
பூதகரப்பான்	பீநாறிச்சங்கு
பூவாளியன்	அரிசித்திப்பிலி
பெரியயேலம்	மலைஏலம்
பெருங்குசத்தோல்	பெருமரப் பட்டை
பெருதலச் சர்க்கரைக் கிழங்கு	பூமிச்சர்க்கரைக் கிழங்கு
பெருமதுரம்	அதிமதுரம்
பெருமுட்டி	பேராமுட்டி
பெரும்புள்நீறு	கூகைநீறு

பேய்மிரட்டி	பெருந்தும்பை
பேராஞ்சீரம்	பெருஞ்சீரகம்
பேர்வன்னியின்வேர்	மாவிலிங்கவேர்
பொகுட்டு	தாமரைப்பூங்கொட்டை
பொருப்பின்சத்து	சிலாசத்து
பொற்பூக் கையான்	பொற்றலைக் கரிப்பான்
மண்டலக் குமிள்	நிலக்குமிள்
மண்டலத்தின்வாகை	நிலவாகை
மதகரிக்கலினி	யானைத்திப்பிலி
மதுகப்புண்ணாக்கு	இலுப்பைப் பிண்ணாக்கு
மத்தனிலை	ஊமத்திலை
மத்தன்காய்	ஊமத்தின்காய்
மதுரம்	அதிமதுரம்
மலாக்காய்ச் சாந்தம்	மலாக்காய்ச் சந்தனம்
மலாக்காய்ப் படீரம்	மலாக்காய்ச் சந்தனம்
மருதுரி	மருதம்பட்டை
மறி	ஆடு
மாகதிமூலம்	திப்பிலிமூலம்
மாகாளி	பெருநன்னாரி
மாதும்பை	பெருந்தும்பை
மாநாகரம்	சுக்கு
மாலூரம்	வில்வம்
மால்துளசி	கருந்துளசி
மாயநிறக்காஞ்சிரை	கருங்காஞ்சிரை
மாவரையின் நாதம்	அன்னபேதி
மாவாழை	மொந்தன்வாழை
மிரட்டானவூமத்தை	மருளூமத்தை
முக்கடுகு	திரிகடுகு
முசுறண்டம்	முசுறுமுட்டை
முத்தக்காசு	கோரைக்கிழங்கு
முத்தெண்ணெய்	விளக்கெண்ணெய்

முத்தை-முஸ்தை	முத்தக்காசு
முப்பலை	திரிபலை
முருகுகொட்டைக் களிப்பாக்கு	இளங்கொட்டைப்பாக்கு
முளரிக்கிழங்கு	தாமரைக்கிழங்கு
முளரியாமணக்கு	காட்டாமணக்கு
முளரிவித்து	தாமரைவிதை
முள்ளங்கிக் கந்தம்	முள்ளங்கிக் கிழங்கு
முள்ளுக்காவளை	முட்காவளை
முனி	அகத்தி
மூதோர்குழல்	முதியார் கூந்தல்
மூரிமாக்கனி	அத்திப்பழம்
மெத்தவாம் மதுரை	அதிமதுரம்
மெருகன் கந்தம்	மெருகன் கிழங்கு
மெய்	பெருங்காயம்
மென்சதனப் புள்ளின்அடி	சிறுசெருப்படி
மேடமுண்ணுப்பாளை	ஆடுதின்னுப்பாளை
மேதி	எருமை
மேதையோனுன்நெய்	பச்சோந்திநெய்
மேலாமரத்தை	பேரரத்தை
மேனி	குப்பைமேனி
மைக்கோளதின்கனி	சமுத்திராப்பழம்
மைந்துகோழி	கருங்கோழி
மையிதழி	மைக்கொன்றை
யட்டி	அதிமதுரம்
யாளி	யாளிவிதை
ரசபூரம்	ரசகற்பூரம்
வதரி	இலந்தை
வயமாவின் திப்பிலி	யானைத் திப்பிலி
வரிவரி	தண்ணீர்மிட்டான் கிழங்கு
வல்லியாங் கொத்தான்	கொடிக்கொத்தான்
வல்லியாம்வேலி	கொடிவேலி

வளைக்குப்பி	சங்குக்குப்பி
வள்ளிக் கந்தம்	வள்ளிக்கிழங்கு
வனத்தித் தாமம்	காட்டாத்திப்பூ
வன்னியாம் லோகம்	செம்பு
வாசி	குதிரை
வாணி	மனோசிலை
வாதத் திறமடக்கி	வாதமடக்கி
வாரிதிக்கனி	சமுத்திராப்பழம்
வால்மரீசி	வால்மிளகு
வால்எலிக்கறி	வெள்ளெலிக்கறி
வாழைமுட்டி	வாழைக்கிழங்கு
வான்படர் கெருடன்	ஆகாயக்கெருடன்
வான்புண்டரீகம்	ஆகாயத்தாமரை
விகங்கபாதம்	செருப்படை
விஷமுட்டி	எட்டி
விடராமணக்கு	காட்டாமணக்கு
விண்ணின் மணிவேர்	அலரிவேர்
விண்விந்து	நாங்குளுப்பூச்சி
விபினமேதிக்கிரம்	காட்டெருமைப் பால்
	என்னும் கூகைநீறு
விரிநிலச் சர்க்கரைக் கிழங்கு	பூமிச்சர்க்கரைக் கிழங்கு
விரைமிளகு	வால்மிளகு
விளங்கம்	வாய்விளங்கம்
விழுதித் தலம்	விழுதியிலை
விழுதிப் பன்னம்	விழுதியிலை
வெஞ்சாரணை	வெண்சாரணை
வெந்த சேங்கொட்டை	சேங்கொட்டைக்கரி
வெந்தநாகம்	நாகபஸ்பம்
வெந்து நீருன்கல்நார்	கல்நார் பஸ்பம்
வெய்யோன்பால்	எருக்கம்பால்

வெள்ளுள்ளி	வெள்ளைப்பூண்டு
வெதுப்படக்கி	சடைச்சி
வெற்புத்துடி	மலையேலம்
வெற்பு நிம்பம்	மலைவேம்பு
வேங்கைச் சிந்தில்	பொற்சிந்தில்
வேங்கைத் தலைக்கையான்	பொற்றலைக் கையான்
வேலிப்பன்னல்	வேலிப்பருத்தி
வேலியாங்காரிபாசம்	வேலிப்பருத்தி
வேசரி	கழுதை
வேத்திரமூலம்	பிரப்பங் கிழங்கு
வேளை	தைவேளை
வேளைப்பூ	தைவேளைப்பூ
வேளைநாய் தூது	நாய்க்கடுகு தூதுவேளை
வைனன்	கெருடன்

★

விஷ பரீட்சை

ஓதுகிறேன் புவியோர்க்குப் பங்கம் பாளை
யுத்தமனே வாயிலிட்டு உண்ணும்போது
இதமாக வெல்லம்போல் இனித்தால் நாகம்
இனித்தபின்பு இளைத்துதென்ருல் மூர்க்கன்
அதிகமய்ப் புளித்து தென்ருல் வழலைச்சாதி [கொம்பன்
யதிலேதான் வழுவழுக்குங் கருவழலைச்சாதி
மதி மயக்ங்க கொள்ளுமடா மயக்குராவும்
மனம்போலே இருக்குமடா புடையன்ருனே (1)

தானுன மண்டலிக்கி மிளகு ரைக்கும் [சாதி
தான்புளித்தே யுரைத்துதென்ருற் பெருவிரியன்
ஆனதுவர் தலை நடுக்கம் விரியன்சாதி
யதிகமாய்க் கடுகடுக்குங் கொம்பேறிமூக்கன்
உண்ணுவைச் சுழற்றுமடா சுருட்டையானல்
உள்ளுக்கே சரசரக்குஞ் சாரையானல்
கண்தெறிக்கும் நெஞ்சடைக்குங் கல்நெஞ்சந்தான்
கண்விழிக்க வொட்டாது ஊமையாமே (2)

உண்ணெஞ்சே படபடக்குஞ் சவடியாக்கு
மொருசு ரணைதெரியாது இருதலைமணியன்
சண்ணமாய்ப் பல்கடுக்குஞ் செய்யா ணுகிற்
சலசலென மூக்கெரியும் எலியின்சாதி
அண்ணுவை நோகுமடா நச்செலிக்கு
அரணைக்கு அதட்டியே வாந்திபண்ணும்
கண்காதை யடைக்குமடா சில்விடத்துக் கெல்லாம்
கசந்து தென்ருலொ ருவிடமுமில்லை நானே (3)

முட்டை யிட்ட நாகமது முழிசிவக்கும்
முறையாகச் சூல்ப்பாம்பு வயிறுளையும்
சட்டமடா மகிட வெளி தெரியாதப்பா
சண்டாளக் கருநாகஞ் செவி கேளாது
கெட்டுவிழி குருடாகும் முட்டி மாய்வான்
கிழப்பாம்பு கடிவாயில் வீங்கும் பாரே

உ

கபரோக வைரி

எவ்வளவு நாட்பட்ட கபரோகங்களையும் ஒரே வாரத்தில் நீக்கி பூரணகுணம் ஏற்படச் செய்கிறது. மருந்து சாப்பிட்ட நிமிஷ முதல் நோய் நிவர்த்தியாவதை அறியலாம். ஒரே நாளில் மூச்சு முட்டல், கஷ்ட சுவாசம், இளைப்பு மாறும். மருந்து சாப்பிட்ட பத்து நிமிஷத்தில் கபக்கட்டு வெளியேறும். மந்தாரகாசம், சுவாச காசம், ஈளை இருமல், அஸ்திசுரம், கபவாதசுரம் கபசுரம், உடம்பெரிவு முதலிய கபரோகங்களுக்கு நிகரற்ற மருந்து.

பாட்டில் விலை ரூ 15.

கிடைக்குமிடம்:

"வைத்தியமணி" சித. வே. ஷண்முகநாத பிள்ளை
தேவகோட்டை

செயின்ட் தெரிசா மெடிக்கல் ஹால்
ஜார்ஜ் V ரோடு. காரைக்குடி.

மீனாட்சி தர்ம சித்த வைத்தியசாலை
அருப்புக்கோட்டை ரோடு, மதுரை.

புதிய நூல்கள்

	ரூ.	அ.
டில்லி செங்கோட்டை விசாரணை	3	0
வான வில்	3	0
காதற் பாட்டு	3	0
காந்தீய வழி	2	12
விறலி விடுதூது	2	8
பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்	2	8
ரசமான சம்பவங்கள்	1	8
உயிர்நிலைக் கலை	1	8
கவிதைக் கதம்பம்	1	6
வைத்திய சாஸ்திரம்	1	4
கமலா	1	0
கம்பன் பிள்ளைத் தமிழ்	1	0

இலக்கியப் பதிப்பகம்
காரைக்குடி.

S. I. Press, Karaikudi.